# பாதைக்கு வெளிச்சம்


தமிழ் மாத இதழ்

# PATHAIKKU VELICHHAM

Tamil Monthly Magazine


| டிசம்பர் 2025 | பாதை: 10 | வெளிச்சம்: 8 | வருட சந்தா: 100/- |
| --- | --- | --- | --- |
| December 2025 | Volume: 10 | Issue: 8 | Annual Subscription: 100/- |



# வெளிச்சத்தைக் கண்டவன் விளம்புகிறதாவது...

**அதிசீக்கிரத்தில் வருகிற ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்.**

இந்த வருஷத்தின் கடைசி மாதத்தைக் காணும்படி செய்த தேவனுக்கு மகிமை உண்டாகட்டும். இந்த வருஷத்தின் கடைசி மாதத்திலே வந்திருக்கிற நாம் ஆவிக்குரிய வாழ்க்கையிலே வளர்ந்த தன்மையோடுகூட புதிய வருஷத்திற்குள் கடந்துபோக வேண்டும். தேவன் இந்த வருஷத்தில் நமக்கு செய்த எல்லா நன்மைகளுக்காக தேவனை ஸ்தோத்தரிப்போம். இந்த மாதத்தோடுகூட இந்த வருடம் முடிகிறது. அப்படியானால் நம்முடைய ஆயுசிலே ஒரு வருடம் குறைந்துவிடுகிறது. அதோடுமாத்திரமல்ல இயேசுகிறிஸ்துவின் வருகைக்கும் ஒரு வருடம் குறைந்துவிடுகிறது. **"நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார் ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்"** (மத். 24:44) என்ற வசனத்தின்படி, இயேசு நினையாத நாழிகையிலே வருவார். அவர் வருவதற்கு முன்னால் நடக்கும் என்று சொல்லப்பட்ட அத்தனை அடையாளங்களும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே இயேசு எந்த நாழிகையில் வந்தாலும் அவரைச் சந்திப்பதற்கு நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

**"பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே"** (எபி. 12:14) என்ற வசனத்தின்படி, பரிசுத்தமாய் இருந்தால் மாத்திரமே அவரைச் சந்திக்க முடியும். நான் இரட்சிக்கப்பட்டுவிட்டேன், ஞானஸ்நானம் பெற்றுவிட்டேன், பரிசுத்தாவியை பெற்றுவிட்டேன் அதனால் நான் அவரைச் சந்தித்துவிடுவேன் என்று நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளக்கூடாது. **"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்"** (மத். 5:8) என்று இயேசு கூறுகிறார். இருதயத்தில் பரிசுத்தம் இருந்தால் மாத்திரமே அவரைச் சந்திக்க முடியும். தேவனுடைய பிள்ளைகளின் இருதயம் பரிசுத்தமாயிருந்தால் மாத்திரமே இயேசுவைத் தரிசிக்க முடியும். **"அவர் அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷர் முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள், தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார் மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது"** (லூக்கா 16:15) என்ற வசனத்தின்படி, இன்றைக்கு எல்லா பரிசுத்தவான்களும் மற்ற மனுஷர்களுக்கு முன்பாக தங்களை நீதிமான்களாக காட்டுகிறார்கள். தேவனோ நம்முடைய இருதயங்களை அறிந்திருக்கிறார் மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது என்று இயேசு சொல்லுகிறார். அருமையானவர்களே நீங்கள் எல்லாருக்கும் முன்பாக நீதிமான்களாக காட்சியளிக்கிறீர்கள், உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிற தேவன் அதில் அசுசியான காரியங்களைக் காண்பாரானால் அது அவருக்கு அருவருப்பு.


**"மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள் உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்"** (மத். 23:27,28) என்ற வசனங்களின்படி, இன்றைக்கு அநேக பரிசுத்தவான்கள் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். மற்றவர்களுக்கு முன்பாக நீதிமான்கள்போல் காட்சியளிக்கிறார்கள். அவர்கள் இருதயத்திலோ மாய்மாலமும் அக்கிரமும் நிறைந்திருக்கிறது. **"மாயக்காரனோ அவர் சந்நிதியில் சேரான்"** (யோபு 13:16) என்ற வசனத்தின்படி, இருதயத்தில் அசுத்தங்களை வைத்துக்கொண்டு நீதிமான்கள்போல் காட்சியளிக்கிற யாவரும் மாய்மாலக்காரர்களே. அப்படிப்பட்டவர்கள் இயேசு வரும்போது அவரைச் சந்திக்க முடியாது. அதோடுமாத்திரமல்ல **"மாயக்காரரோடே அவனுக்குப் பங்கை நியமிப்பான் அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்"** (மத். 24:51) என்ற வசனத்தின்படி, இருதயத்தில் அசுத்தங்களை வைத்துக்கொண்டு நீதிமான்கள்போல் காட்சியளிக்கிறவர்கள் முடிவிலே அழுகையும் பற்கடிப்பும் நிறைந்த நரகத்திலே தள்ளப்படுவார்கள். **"தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனாகிய தாவீது நீர் என் இருதயத்தைப் பரிசோதித்து, இராக்காலத்தில் அதை விசாரித்து, என்னைப் புடமிட்டுப்பார்த்தும் ஒன்றும் காணாதிருக்கிறீர் என் வாய் மீறாதபடிக்குத் தீர்மானம் பண்ணினேன்"** (சங். 17:3) என்று கூறுகிறான்.

அப்படியே அருமையானவர்களே தேவன் நம்முடைய இருதயத்தைக் காணும்போது அதில் அருவருப்பு காணப்படாதபடிக்கு அதைப் பரிசுத்தமாய் காத்துக்கொள்ள வேண்டும். **"எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்"** (2 கொரி. 10:4,5) என்ற வசனங்களின்படி, இருதயத்தை அசுத்தத்தினால் நிரப்ப வேண்டும் என்ற எண்ணங்கொண்ட சாத்தான் அப்படிப்பட்ட எண்ணங்களைக் கொண்டுவரும்போது, இயேசுவின் நாமத்தினால் அவைகளை சிறைப்படுத்தும்போது தாவீதைப்போல நாமும் சுத்த இருதயத்தோடுகூட காணப்பட்டு அவருடைய வருகையிலே நாமும் எடுத்துக்கொள்ளப்படுவோம்.

**கர்த்தர் வருகிறார்! மாரநாதா!!**



**கர்த்தரின் வேலைக்காரன்,**
P.அற்புதராஜ் சாமுவேல்



# கிறிஸ்து எனக்கு ஜீவன்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாகட்டும். கடந்த மாதத்திலே கிறிஸ்து எனக்கு ஜீவன் என்கிற தலைப்பிலே அதின் முதல் பகுதியை நாம் தியானித்தோம். அதைத் தொடர்ந்து இந்த மாதம் அதனுடைய இரண்டாவது பகுதியை நாம் தியானிக்கப் போகிறோம். 2 கொரிந்தியர் 5:14,15 **"கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது. ஏனென்றால் எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க எல்லாரும் மரித்தார்கள் என்றும் பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத் திராமல் தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத் திருக்கும்படி அவர் எல்லாருக்காகவும் மரித்தார் என்றும் நிதானிக்கிறோம்"**. இதைக்குறித்து தான் கடந்த மாதத்திலே தியானித்தோம். நீங்களும் நானும் பாவத்தினாலும் அக்கிரமத் தினாலும் மரித்துக் கிடந்தோம். பிதாவாகிய தேவன் நம்மை நேசித்து தம்முடைய குமாரனாகிய இயேசுவை இந்த உலகத் திற்கு அனுப்பினார். இயேசுவோ பாவமில்லாதவர். அக்கிரமத் தினாலும் பாவத்தினாலும் மரித்து நரகத்துக்குப் போக வேண் டிய நம்மை மீட்கும்படியாக இயேசு தம்மையேப் பலியாக ஒப்புக்கொடுத்தார். அவர் அடிக்கப்பட்டார். நொறுக்கப்பட்டார். ஆணிகளால் கடாவப்பட்டார். ஈட்டியால் குத்தப்பட்டார். இத்தனை வேதனையும் அடைந்து நம்மை விடுதலையாக்க வேண்டும் என்று எண்ணினார். இப்படிப்பட்ட அன்புள்ள ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தார். அவர் எனக்காகவும் மரித்தார் என்று நிதானிக்கிறவன், ஐயோ இயேசு எனக்காக மரித்தாரே என்று நினைத்து அவரை உண்மையாய் நேசிக்கிறவனுடைய வாழ்க்கை வித் தியாசமாயிருக்கும். அதை நிதானிக்கிறவன் வித்தியாசமாய் வாழக்கூடியவனாக இருப்பான்.

அதைத்தான் பவுல் செய்தான். இயேசு எனக்காக மரித் தார். எனக்காக உயிரையேக் கொடுத்தார். ஆகவே என்னுடைய வாழ்க்கையில் இயேசுகிறிஸ்துவே ஜீவன் என்று சொன்னான். ஒருவேளை அவருக்காக என் உயிரே போக வேண்டியதாக இருந்தாலும் அதை நான் லாபமாக கருதுகிறேன் என்று சொன்னார். அருமையான தேவ ஜனமே, இயேசு மாத்திரம் மரிக்காமல் இருந்திருந்தால் நீயோ நானோ நரகமாகிய அக்கினி கடலுக்குப் போக வேண்டியதாயிருக்கும். ஆனால் உன்னையும் என்னையும் மீட்டெடுப்பதற்காக இயேசு தன்னையேப் பலியாக்கினார். என்றைக்காவது இதை யோசித் துப் பார்த்தாயா? நிதானித்துப் பார்த்தாயா? நான் நரகத்திற்குப் போவதற்கு பதிலாக இயேசு எனக்காக பலியாகி பாதாளத்தை ருசித்துப் பார்த்தார். அந்த அன்புள்ள ஆண்டவருக்கு நான் என் அன்பை ஊற்றுகிறேன். அவரை உயிராய் நேசிக்கிறேன் என்று சொல்லி என்றைக்காவது நிதானித்துப் பார்த்தாயோ? பவுல் நிதானித்தான். அந்த அன்பு என்னை நெருக்கியது என்றான். அப்படியென்றால் உயிராக நேசிக்கிறவன் எப்படி இருப்பான் என்று தான் கடந்த மாதத்தில் பழைய ஏற்பாட்டில் உள்ள ஒரு உதாரணத்தை தியானித்தோம்.

இஸ்ரவேல் ஜனங்களை பெலிஸ்தியன் கோலியாத் அடிமைப்படுத்த வாஞ்சித்துக்கொண்டிருந்த வேளையில், நாற் பது நாட்கள் இஸ்ரவேல் ஜனங்கள் போராட்டத்தின் மத்தியில் வாழ்கிறார்கள். ஆனால் இந்த கோலியாத்தை வெல்வதற்கு யாருமே முன் வரவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் தாவீது என்கிற ஒரு இளைஞன் தன் உயிரையும் பணயம் வைத்து ராஜாவிடம் அனுமதி பெற்றுக்கொண்டு அவனை வீழ்த்தினான். அவன் தலையை வெட்டினான். தேசத்தையே அடிமைத்தனத் திற்கு உட்படாதபடிக்கு காப்பாற்றினான். இதை எல்லா ஜனங் களும் அறிவார்கள். பாடல் பாடினவர்கள் உண்டுதான். போற் றியும் இருப்பார்கள் தான். ஆனால் ஒரே ஒருவன் மட்டும் தான் அதாவது சவுலுடைய குமாரன் யோனத்தான் மாத்திரமே தாவீதை உயிராய் நேசித்தான். நாங்கள் அழிந்து போயிருக்க வேண்டும். ஆனால் தாவீதோ அவனுடைய உயிரையும் பணயம் வைத்து எங்களைக் காப்பாற்றினான். ஆகவே நான் அவனை உயிராய் நேசிக்கிறேன் என்று சொன்னான். சொன் னது மாத்திரமல்ல. நேசித்தான். அப்படி உயிராய் நேசித்தவன் என்ன செய்தான் என்று கடந்த மாதத்தில் தியானித்தோம். ஒன்று அவனோடுகூட உடன்படிக்கைப் பண்ணினான். அப்படியே இயேசுவை உயிராய் நேசிக்கிறவன். இயேசு எனக் காக தன் ஜீவனையே கொடுத்தார். ஜீவனுக்கு ஈடாக நான் என்னையே கொடுப்பேன் என்று உயிராய் நேசிக்கிறவன், பாவத்திலிருந்து விடுதலையாவான். அக்கிரமத்திற்காகவும் அருவருப்புக்காகவும் ஆண்டவரிடம் மன்னிப்புக் கேட்டு விட் டுவிடுவான். பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று இயேசுவோடு உடன்படிக்கைப் பண்ணுவான் என்று கடந்த மாதத்திலே நாம் தியானித்தோம்.



உயிராய் நேசிக்கிறவன் நிச்சயமாய் உடன்படிக்கை பண்ணுவான். இரண்டாவதாக யோனத்தான் என்ன செய் தான்? தன் தகப்பன் தாவீதைக் கொல்ல நினைத்தபோது அவன் ஏன் சாகவேண்டும்? அவன் என்ன செய்தான்? என்று சொல்லி, சாகடிக்க விரும்பின சவுலின் கைகளுக்கு அவனைத் தப்புவிக்கத்தக்கதாக அவனுக்கு எதிர்த்து நின்றான். அப்படியானால் என்ன அர்த்தம்? யோனத்தான் அவன் சாகிறதை விரும்பவில்லை. அடுத்தவன் சாகடிப்பதையும் அவன் விரும்பவில்லை. அருமையானவர்களே இரட்சிக் கப்பட்டு இயேசு எனக்கு உயிர் என்று ஞானஸ்நானத்தில் உடன்படிக்கைப் பண்ணினவன், மறுபடியும் பாவம் செய்து இயேசுவை சிலுவையில் அடித்து சாகடிக்கமாட்டான். மற்றவர் கள் பாவம் செய்யும்போது ஏன் இயேசுவை சிலுவையில் அடிக் கிறாய் பாவம் செய்யாதே என்று கண்டிக்கிறவனாக இருப்பான். இதுதான் யோனத்தானுடைய வாழ்க்கையில் நடந் தது. நீங்களும் நானும் இயேசுவை உயிராய் நேசித்தால் இயேசுவோடு உடன்படிக்கைப் பண்ண வேண்டும். மறுபடி பாவம் செய்யக்கூடாது. பாவத்துக்கு விரோதமாக இரத்தமே சிந் தத்தக்கதான அளவுக்கு சூழ்நிலை வந்தாலும் போராடி பாவத் தை மேற்கொண்டே ஆக வேண்டும். அப்படியே அடுத்தவர்கள் பாவம் செய்யும்போது தடுக்க வேண்டும் என்றும் கடந்த மாதத் திலே தியானித்தோம். 1 சாமுவேல் 18:1,4 **“அவன் சவுலோட பேசி முடிந்த பின்பு யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருந்தது யோனத்தான் அவனை தன் உயிரைப் போல சிநேகித்தான். யோனத்தான் போர்த்துக்கொண்டிருந்த சால்வையைக் கழற்றி அதையும் தன் வஸ்திரத்தையும் தன் பட்டையத்தையும் தன் வில்லையும் தன் கச்சையையும்கூடத் தாவீதுக்குக் கொடுத்தான்”**

அருமையானவர்களே, யோனத்தான் தாவீதை உயிராய் நேசித்தபடியினாலே தான் போர்த்துக்கொண்டு இருந்த தன்னுடைய சால்வை, தன்னுடைய வஸ்திரம், தன்னுடைய பட்டயம், தன்னுடைய வில், தன்னுடைய கச்சையாகிய எல்லாவற்றையும் கொடுக்கிறான். ஏனென்றால்? எனக்கு உயிர் அவன் தான். எனக்கு இதெல் லாம் பெரிய விஷயம் இல்லை. அவன் எனக்கு உயிராக இருக்கிறான் அவனுக்கு இதெல்லாம் போகட்டும் என்று எல்லாவற்றையும் கொடுத்துவிட்டான்.

**“உனக்கும் எனக்கும் தன் உயிரையே கொடுத்த ஆண்டவருக்கு நீ என்ன கொடுக்கிறாய்? என்ன செய்கிறாய்?”**

எந்த மனுஷன் இயேசுவை உயிராய் நேசிக்கிறானோ அவன் தனக்கென்று ஒன்றையும் வைத்துக்கொள்ளமாட்டான். எல்லாவற்றையும் இயேசுவுக்காகக் கொடுப்பான். ஏனென் றால் அவன் அவரை உயிராக நேசிக்கிறான். உயிராக நேசிக் கிறேன் என்று சொல்லிக்கொண்டு எனக்கு அதைத் தாரும் இதைத் தாரும் ஆண்டவரே! உம்மையே நான் நேசிக்கிறேன், உயிராய் நேசிக்கிறேன் என்று அவரிடம் எதையும் கேட்க மாட் டான். ஆனால் நீ உம்மையே நான் நேசிக்கிறேன் என்று வாயினால் மட்டும் சொல்லிக்கொண்டு எனக்கு அதைத் தாரும் இதைத் தாரும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறாய். ஆனால் இயேசுவுக்காக என்ன செய்துகொண்டு இருக்கிறாய்? எனக்கு அது வேண்டும் இது வேண்டும் என்று கேட்காதே. இன்றைக்கு வரைக்கும் நான் அவரிடம் எனக்கு இது வேண்டும், அது வேண் டும் என்று உலகப்பிரகாரமாக ஒன்றுகூட நான் கேட்டது இல்லை, ஆனால் எனக்கு ஆண்டவர் இது இல்லை அது இல்லை என்று ஒன்றில் கூட குறை வைத்தது இல்லை. வேதம் சொல்லுகிறது இன்றைக்கு அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார் கள். அவர்கள் பூமிக்குரியவைகளையே சிந்திக்கிறார்கள். ஆண்டவரை நேசிக்கிறவன் பூமிக்குரிய ஆசீர்வாதத்தைக் கேட்க மாட்டான். ஆவிக்குரிய வாழ்க்கையில் ஆண்டவருக்கு என்ன செய்யலாம், என்ன கொடுக்கலாம், எவ்வளவு கொடுக் கலாம், எப்படி வாழலாம், எப்படி ஆண்டவருக்காக செய்யலாம் என்று இப்படித்தான் யோசிப்பான். உயிராக நேசிக்கிறவன் இப்படித்தான் இருப்பான். ஒரு பெண்ணை ஒரு வாலிபன் உயிராய் நேசித்தான் என்றால் அவள் எதையாவது கேட்டுவிட் டால் அவள் கேட்டதையும் கொடுக்கிறான் கேட்டதற்கு அதிகமாகத் தன்னுடையதை எல்லாம் கொடுக்கிறான். காரணம் என்ன? அவளை உயிராய் நேசிக்கிறான். நான் நூற் றுக்கு நூறு இந்த LOVE க்கு எதிரி. வேதம் இதை ஒருபோதும் ஒத்துக்கொள்வதில்லை. உதாரணத்திற்கு சொல்கிறேன் லவ் பண்றேன் என்று சொல்கிறான் ஒரு வாலிபன். அவள் என்ன கேட்டாலும் கொடுக்கிறான். அவள் கேட்கவில்லையென் றாலும் அள்ளி அள்ளிக் கொடுக்கிறான். ஏனென்றால் என் உயிரே அவள்தான். என் அப்பா அம்மா எனக்கு பெரிது இல்லை, என் வேலை பெரிது இல்லை, என் பணம் பெரிது இல்லை. உயிரை எடுக்கும் பெண்ணிற்கு எல்லாவற்றையும் கொடுக்க நினைக்கிறான். உயிரை உனக்கும் எனக்கும் கொடுத்த ஆண்டவருக்கு நீ என்ன கொடுக்கிறாய்? என்ன செய்கிறாய்? யோனத்தான் தாவீதை உயிராக நேசித் தபடியினாலே அவனுக்கு எல்லாவற்றையும் கொடுக்கிறான். உயிராய் நேசிக்கிறவன் அப்படித்தான் கொடுப்பான். நான் ஒரு உதாரணம் சொல்லுகிறேன். கணவன், மனைவி அவர்களுக்கு ஒரு பையன் இருக்கிறான். அவர்கள் ஐந்து லட்ச ரூபாய் சேர்த்து வைத் திருக்கிறார்கள். திடீரென்று அவனுக்கு உடலில் வியாதி வந்தது. டாக்டர் சொன்னார். இது ரொம்ப ஆபத்தான நிலையில் இருக்கிறது கிட் டத்தட்ட ஒரு நான்கு லட்சத்திலிருந்து ஐந்து லட்சம் ஆகும் என்று சொல்கிறார்கள். பெற்றோர் என்ன செய்வார்கள்? ஐயா! என் பிள் ளை தான் எங்கள் உயிர், எங்களுக்கென்று இவன்தான் இருக்கிறான், இவனுக்காகத்தான் நாங்கள் எல்லாவற்றையும் சேர்த்து வைத்திருக்கிறோம் என்று அவனுக்காக இவர்கள் எதையும் இழக்க தயாராவார்கள்.



நான்கு லட்சமாக இருந்தாலும் சரி, ஐந்து லட்சமாக இருந்தாலும் சரி எத்தனை லட்சமாக இருந்தாலும் சரி என்னிடம் இருக்கிறதையும் கொடுப்பேன் எங்கேயாவது கடனையாவது வாங்கி என் பிள்ளையைக் காப்பாற்றுவேன் என்பார்கள். ஏனென்றால் எங்களுக்கு இவன்தான் உயிர். அப்படியே ஊழியம் செய்வதற்காக என் பலத்தைக் கொடுப்பேன், ஊழியத்திற்காக என் பணத்தைக் கொடுப்பேன் என்று யாராவது யோசிக்கிறார்களா? உலகத்தில் சொல்வார்கள். உன்னிடமிருந்து அரிசி கொண்டு வா, என்னிடமிருந்து உமி கொண்டு வருகிறேன் ஊதி ஊதி சாப்பிடுவோம். அப்படியென்றால் ஆண்டவரிடமிருந்து ஆசீர்வாதம் வர வேண்டும், அவரிடமிருந்து நான் எல்லாவற்றையும் வாங்கிக் கொள்ளுவேன், ஆனால் நான் அவருக்காக எதையும் செய்யமாட்டேன் என்றால் என்ன அர்த்தம்? அவருக்காக வாழுவேன், அவரை உயிராக நேசிக்கிறேன் என்று நீ உண்மையாகவே சொல்வாயானால் அவருக்காக உன்னையே கொடுப்பாயே. அவர்தான் உனக்காக உயிரையே கொடுத்துவிட்டாரே. தேவனை நேசிக்கிறவனால் சும்மா இருக்க முடியாது. அள்ளி அள்ளிக் கொடுப்பான். குழந்தை முடியாமல் இருக்கும்போது தன்னுடைய உயிராக நேசிக்கப்பட்ட அந்தக் குழந்தைக்காக சேர்த்து வைத்ததையேக் கொடுப்பேன் என்று சொல்லுகிறான், கடன் வாங்கி கொடுப்பேன் என்று சொல்லுகிறான். நீங்கள் கடன் வாங்கி ஆண்டவருக்காக செய்யுங்கள் என்று சொல்லவில்லை, கடன் 100/100 பாவம். கடன் வாங்காதே, ஆனால் உன்னிடம் இருப்பதைக் கொடு, தேவனை உயிராக நேசித்தால் கட்டாயம் கொடுப்பாய். உன் நேரத்தைக் கொடுப்பாய். ஒருவேளை ஆண்டவர் உன்னை ஊழியத்திற்கு அழைத்தால் ஆண்டவரை நீ உயிராக நேசித்தால் வேலையை விட்டு விட்டு ஊழியத்திற்குப் போகிறேன் என்று உன்னையும் கொடுப்பாய். மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்ட அந்த பெண் ஒரு கன்னிப் பெண். திருமணம் நிச்சயம் பண்ணப்பட்டிருக்கிறது, இந்த சூழ்நிலையில் திடீரென்று ஒரு தூதன் தோன்றி கிருபை பெற்றவளே! வாழ்க! என்று சொல்கிறான்.




அந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதாக இருக்குமோ என்று பயப்படுகிறாள். பயப்படாதே! தேவன் என்னை அனுப்பினார், நீ பரிசுத்தாவியால் கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய் அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக என்றான். இவளோ, நான் இன்னும் புருஷனை அறியவில்லையே என்றாள். அதற்கு தூதன்: தேவனால் கூடாதது ஒன்றும் இல்லை மலடியான எலிசபெத்திற்கு இது ஆறாவது மாதம் என்று அவன் சொன்னபோது அவள் தன்னுடைய வாலிப வயது ஆசையை எண்ணவில்லை, தன் கணவனைப் பெரிதாக எண்ணி அவனிடம் அனுமதி கேட்கவில்லை, பெற்றோர் என்ன சொல்வார்களோ என்று சொல்லி அவர்களிடத்திலும் போகவில்லை, ஊர் என்னைப் பழிக்குமே என்று சொல்லி யோசிக்கவில்லை. அந்த வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் இதோ நான் ஆண்டவருக்கு அடிமை. உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும் என்றாள். தேவனை நேசித்து, தன்னுடைய ஆசையைத் தியாகம் பண்ணுகிறாள், தன் புருஷனைத் தியாகம் பண்ணுகிறாள், தன் பெற்றோரைத் தியாகம் பண்ணுகிறாள், ஊரையேத் தியாகம் பண்ணுகிறாள் காரணம் என்ன? தேவன். எனக்கு தேவன் பெரிது. அவளுக்காக இயேசு அந்த நாட்களில் உயிரைக்கூட கொடுக்கவில்லை. அது அதற்கு முன்பாக உள்ள வாழ்க்கை, ஆனால் இன்றைக்கு உயிரைக் கொடுத்தார் என்று தெரிந்தும் அவரிடம் அன்பு செலுத்த முடியவில்லையே, ஆனால் யோனத்தானோ தனக்குரியதை எல்லாம் கொடுக்கிறான், எனக்கு எல்லாம் நீ தான். வைத்துக்கொள், வைத்துக்கொள் என்று எல்லாவற்றையும் கொடுக்கிறான், ஆண்டவரை உயிராய் நேசிக்கிறவன் நிச்சயமாய்க் கொடுப்பான். கொடுத்துக்கொண்டே இருப்பான். கர்த்தருக்கு மகிமை உண்டாகும்படியாக சாட்சியாக சொல்கிறேன். எனக்கு ஊழியங்களிலே என் கையிலே தரக்கூடிய எந்த காணிக்கையாக இருந்தாலும் சரி. எதுவாக இருந்தாலும் சரி. நான் எனக்கென்று நான் சேர்த்துவைக்கிறதே இல்லை. வங்கிக்கணக்கில் நான் போய் எனக்கென்று பணம் போடவேண்டும் என்று நான் போட்டதே கிடையாது. நான் சாப்பிடுவேன். சட்டை போடுவேன். காருக்கு பெட்ரோல் போடுவேன். ஊழியர்களுக்கு நான் கொடுத்து விடுவேன். கர்த்தருக்கென்று கொடுத்து விடுவேன்.

சேர்த்து வைத்து என்ன பண்ணப்போகிறேன்? என் பிள்ளைக்காகவா? இல்லை இன்றைக்கு கர்த்தர் என்னை ஆசீர்வதிப்பாரானால், என் பிள்ளை பரிசுத்தமாக இருந்தால் அவனையும் ஆசீர்வதிக்க அவர் வல்லவர். அவனுக்கு என்று நான் சேர்க்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. ஆகவே நான் ஏன் சொல்கிறேன் என்றால், உயிராய் நேசிக்கிறவன் எதையும் கொடுப்பான். தாவீது தேவனுடைய ஆலயத்தின்மேல் வைத்த வாஞ்சையினாலே என்ன கொடுத்தான்? தங்கம் வெள்ளி விலை உயர்ந்த கற்கள் மரம் வெண்கலம் எல்லாம் ஆண்டவருக்கு என்று கொடுத்தான். சேர்த்துவைத்த எல்லாவற்றையும் கொடுத்தான். அது மாத்திரமல்ல, தனக்கு சொந்தமானதையும் கொடுத்தான். ஏன்? ஆலயத்தின்மேல் வைத்த வாஞ்சை. ஆண்டவர்மேல் வைத்திருக்கிற வாஞ்சை.



உயிராக நேசிக்கிறவன், தசமபாகத்தோடே நிற்க மாட்டான். காணிக்கைப் போட்டவன் அதைக் கணக்குப் பார்க்க நினைக்க மாட்டான். தனக்குரியதையெல்லாம் கொடுக்க பார்ப்பான். இன்னும் எவ்வளவு கொடுக்கலாம்? எப்படி கொடுக்கலாம்? அள்ளிக் கொடுக்கலாமா? இப்படித்தான் கொடுப்பான்.

ஒரு குழந்தைக்கு 5 லட்சத்தைக் கொடுக்க தயாராக இருந்தார்களே, அவர்கள் வீட்டு வேலைக்காரியினுடைய பிள்ளை அதே வியாதியில் படுத்திருக்கிற சூழல் வருகிறதென்று வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது அந்த வேலைக்காரி அம்மா, என் பிள்ளைக்கு இப்படி ஒரு வியாதி வந்து விட்டது. ஏதாவது கொடுங்கள் ஐயா! ஒரு 2 லட்சமாவது கொடுங்கள் ஐயா! என்று கேட்டால் நான் அவ்வளவெல்லாம் தரமுடியாது. ஒரு ஐந்தாயிரம் வேண்டும் என்றால் தருகிறேன். வாங்கிக் கொள் என்று தான் சொல்வார்கள். பாவம். தன் பிள்ளைக்கு 5 லட்சத்திற்கும் மேலேயும் செலவழிக்கத் தயார். காரணம் அவன் அவர்களுடைய உயிர். ஆனால், அந்த வேலைக்காரியின் பிள்ளை அதே வியாதியில் படுத்திருக்கும்போது, ஐந்தாயிரம் தருகிறேன் என்று சொல்கிறார்கள். ஏன் இந்த பிள்ளை மேல் உயிர் இல்லை. தன் பிள்ளை மேல் உயிர்.

அருமையான தேவ ஜனமே! என் ஆண்டவரை நீ உயிராய் நேசித்தால் ஆண்டவருக்கு அள்ளி அள்ளிக் கொடுப்பாய். உயிராய் நேசிக்கிறவன் தனக்காக இங்கு சேர்க்கமாட்டான். ஆனால் பரலோகத்தில் அவனுக்காகச் சொத்து சேர்ப்பான். ஒரு ஏழை விதவை எல்லாரும் காணிக்கை போடும் போது அவளும் காணிக்கைப் போடுகிறாள். இயேசு காணிக்கை பெட்டியின் அருகில் இருந்தார். ஏழை விதவையும் போட்டாள், இரண்டு காசு தான் போட்டாள். இயேசு சீஷர்களைப் பார்த்து, இவள் காணிக்கைப் போட்டதை கவனித்தீர்களா? எல்லாரும் தங்களுக்கு உள்ளதில் இருந்து போட்டார்கள். இவளோ தனக்குள்ள எல்லாவற்றையும் போட்டாள். ஏன் என் ஆண்டவருக்கு இல்லாதது. எனக்கு வேண்டாம் ஐயா! என் ஆண்டவருக்காக நான் எதையும் கொடுக்க தயார்.

அருமையான தேவ ஜனமே! ஆபிரகாமிடம் தேவன் அவனுடைய முதல் மகனை அனுப்பிவிடச் சொன்னார். இரண்டாவது, மகன் ஈசாக்கு இருக்கிறான். அவனையும் பலியிடச் சொன்னார். ஆனால் அவனோ ஒன்றையும் யோசிக்கவில்லை. நான் பலியிடத் தயார். காரணம் என்ன? தேவன் மேல் உள்ள அன்பு. இந்த வேளையில் ஆண்டவரை உயிராய் நேசிக்கிறேன் என்று சொல்லுகிறாயே. கர்த்தருக்காக எதைத் தியாகம் பண்ணுகிறாய்? என்ன கொடுக்கிறாய்? ஆண்டவருக்கு என்று எதையாவது கொடுக்க வேண்டுமென்று வாஞ்சிக்கிறாயா? உன் நேரத்தை ஊழியத்திற்காக செலவழிக்கிறாயா? உன் பணத்தை ஊழியங்களுக்காக கொடுக்கிறாயா? உன் குடும்பம் ஊழியத்திற்காக செயல்பட வேண்டும் என்று ஏக்கம் கொள்கிறாயா? ஆண்டவரை உயிராக நேசிக்கிறவனுக்கு இதே எண்ணம் தான் இருக்கும்.

முதலாவது உடன்படிக்கைப் பண்ணுவான். இரண்டாவது பாவஞ்செய்யமாட்டான். பாவம் செய்தவர்களை கண்டிப்பான். மூன்றாவதாக தனக்குரியதெல்லாம் கொடுப்பான்.

நான்காவதாக 1 சாமுவேல் 18:1 **"அவன் சவுலோடே பேசி முடிந்தபின்பு யோனத்தானின் ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் சேர்ந்திருந்தது. யோனத்தான் அவனைத் தன் உயிரைப்போல சிநேகித்தான்"**. யோனத்தான் தாவீதை உயிராய் சிநேகித்தபடியினாலே, யோனத்தானின் ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடு ஒன்றாய் சேர்ந்து இருந்தது. யார் இசைந்து போனது? யோனத்தான்.

நீ இயேசுவை உயிராய் நேசித்தால். இயேசுவோடுகூட இசைந்து போவாய். **"அப்படியே கர்த்தரோடு இசைந்து இருக்கிறவனும் அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்"** (1 கொரிந்தியர் 6:17) என்று வேதம் சொல்லுகிறது. ஆண்டவராகிய இயேசுவை உயிராய் நேசிக்கிறவன், அவரோடு இசைந்து இருக்கிறவன், அவரோடுகூட ஒரே ஆவியாயிருக்கிறான். அப்படியென்றால் இயேசுவுக்கு என்ன ஆவி இருக்கிறதோ, அதே ஆவியுடன் இருக்க வேண்டும். இயேசு எப்படிப்பட்ட பரிசுத்தமுள்ளவராக இருக்கிறாரோ அதே பரிசுத்தம் அவரோடே இசைந்து போகிறவனுக்கு வரும், யார் இசைந்து போவார்கள்? தேவனை உயிராய் நேசிக்கிறவர்கள். ஆண்டவர் என்ன சொன்னாலும் சரி ஆண்டவரே உம்மோடு சேர்ந்துபோக விரும்புகிறேன் ஆகவே அப்படியே செய்கிறேன் என்று செய்வான், அதோடுமாத்திரமல்ல, இதை நீ செய்யக்கூடாது என்றால், சரி ஆண்டவரே! நான் இதைச் செய்யவில்லையென்று இசைந்துப் போவான்.

நீங்கள் எப்படி? என் உயிரான.. உயிரான.. உயிரான.. இயேசு என்று பாட்டு மட்டும் நல்லாதான் இருக்கு. ஆனால் ஆண்டவர் சொன்ன வசனத்திற்குக் கீழ்ப்படிவதில்லை. ஏன் வேதம் வாசிக்கிறீர்கள்? ஏதாவது ஆசீர்வாதம் வருமா என்று தானே வாசிக்கிறீங்க.

*இந்த சின்ன பிள்ளைகளுக்கு கிரீம் பிஸ்கட் கொடுத்து பாருங்க. கிரீம் எல்லாம் சாப்பிட்டுவிட்டு பிஸ்கட்டை சாப்பிட மாட்டாங்க. அதுபோல இன்றைக்கு ஆண்டவர் இதை செய்யாதே அதை செய்யாதே என்று சொன்னால் அதெல்லாம் விடுங்க. ஆசீர்வாதமா ஏதாவது சொல்லுங்க. நான் வாங்கிவிட்டு போகிறேன் என்கிறார்கள். இவர்கள் தேவனையல்ல, தேவனிடத்தில் உள்ளதை நேசிக்கிறவர்கள். ஐயோ! உங்கள் வாழ்க்கையை கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.*

"இதை செய்யாதே
அதை செய்யாதேனு
சொல்லாதீங்க
ஆண்டவரே,
**ஆசீர்வாதத்தை**
மட்டும்
சொல்லுங்க!
அது எனக்கு
போதும்!!"



ஆண்டவர் என்ன சொன்னாலும் கீழ்ப்படிவீர்களா? இயேசுகிறிஸ்துவோடு அநேக சீஷர்கள் இருந்தார்கள். இயேசு ஒருநாள் தேவாலயத்தில் உபதேசம் பண்ணும்போது, நான் வானத்திலிருந்து வந்த ஜீவ அப்பம் என் மாம்சத்தை புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு அவனை கடைசி நாளில் எழுப்புவேன் என்றார். அதைக்கேட்ட அநேக சீஷர்கள் இது கடினமான உபதேசம். யார் இதை கேட்பார்கள் என்று சொல்லி அவரை விட்டு பின் வாங்கி போய்விட்டார்கள்.

யார் இயேசுகிறிஸ்துவினிடத்தில் நூற்றுக்குநூறு அன்புகூருகிறானோ அவனுக்கு எந்த வசனமும் பாரமாக இருக்காது. ஆண்டவரை உயிராய் நேசிக்கிறபடியினாலே, ஆண்டவரே, நீங்க சொல்லுகிறபடி நான் வாழுவேன். எதுவும் பாரமாக இருக்காது என்பான்.



ஆனால் இன்றைக்கு அநேகர் இயேசுவை உயிராய் நேசிக்கிறேன் என்று சொல்லியும் *இந்த வசனத்தின்படி எல்லாம் வாழ முடியாது, கடன் வாங்காமல் எவன் இருப்பான்? பொய் சொல்லாமல் எவன் வாழ்வான்?* என்கிறார்கள்.

எனக்கு ஆச்சரியம். விசுவாசிகள் கூட வேலையில் நங்கு அல்லது ஐந்துநாள் லீவு வேண்டும் என்றால் உடனே மெடிக்கல் லீவு போடுகிறார்கள். மெடிக்கல் லீவு போட்டு பொய் சொல்கிறாயா? ஆண்டவரோடு கூட இசைந்துப் போக முடியவில்லை உனக்கு.. கடன் வாங்காதே என்றால் வாங் கமாட்டேன் என்று சொல்லு. எவன் கடன் வாங்காமல் இருக்கிறான், எல்லாரும் வாங்குகிறார்கள் என்கிறாயா? அவன் ஆண்டவரை உயிராய் நேசிக்கவில்லை, ஆனால் நீ உயிராய் தானே நேசிக்கிறாய்? கடன் வாங்க முடியாது என்று சொல்.

உங்கள் சந்தேகங்களை
9884253758
என்ற எண்ணிற்கு WhatsApp மூலம் தெரிவிக்கலாம்

பிதாவை, குமாரனாகிய இயேசு நேசிக்கிறார், பிதாவும் நேசிக்கிறார் இவர் என் நேசக்குமாரன் இவரில் பிரியமாயிருக் கிறேன் என்றார். அந்த அளவிற்கு இயேசு பிதா சொன்னபடியே சொன்னார், பிதா செய்தபடியே செய்தார். இயேசு பிதா எவைகளை செய்தாரோ அவைகளை அப்படியே செய்தார் என்று யோவான் 5:19 ல் இருக்கிறது, பிதா எவைகளை சொன் னாரோ அப்படியே சொன்னார் என்றும் உபதேசித்தார் என்றும் யோவான் 12:49-50 ல் இருக்கிறது. காரணம் என்ன? என் பிதாவுடன் நான் இசைந்து போகிறேன் என்று இசைந் துபோனார். அருமையான தேவஜனமே பவுல் சொன்னாரே கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் என்று, உயிராய் நேசிக்கிறவன் என்ன செய்கிறான்?

கலாத்தியர் 2:20 – **"கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக் கிறேன் இனி நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத் திருக்கிறார் நான் இப்போது மாம்சத்தில் பிழைத்திருக் கிறதோ என்னில் அன்புகூர்ந்து எனக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத் தினாலே பிழைத்திருக்கிறேன்"**

இனி நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக் கிறார். என் விருப்பப்படி அல்ல ஆண்டவர் விருப்பப்படியே வாழ்கிறேன் என்றான். கிறிஸ்துவை உயிராய் நேசிக்கிறவன் இப்படித்தான் வாழ்வான். தனக்கென்றுச் சொல்லி வாழ விரும்ப மாட்டான். ஆண்டவர் என்ன சொன்னாலும் கீழ் படிவேன், நான் வேதத்தைப் படிக்கும்போது ஆண்டவர் எனக்கு சொன்னதை அப்படியே செய்வேன் என்று சொல்லுவேன் அது எந்த வசனமாக இருந்தாலும் சரி.

கொலோசெயர் 3:4 – **"நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்"** வரப் போகிறார் இயேசு.

*பவுல் அழகாய் சொல்லுகிறார். நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படப் போகிறார் அப்படியென்றால் இயேசுவை உயிராய் நேசிக்கக்கூடிய தேவ ஜனங்களை மீட்டுப்போக வருகிறார். அப்படி வரும்போது இயேசுவை உயிராய் நேசித்து உடன்படிக்கைப்பண்ணி பாவம் செய்யாது வாழ்ந்து, பாவம் செய்கிறவர்களைக் கண்டித்து, தனக்குரியவைகளையெல் லாம் அவருக்குக் கொடுத்து ஆண்டவர் சொன்னபடியெல்லாம் வாழ்கிறவர்களை அவர் மகிமையிலே சேர்ப்பார். இயேசுவை உயிராய் நேசித்து இப்படி வாழ்வோமானால் மகிமை அடைவோம்.*

அப்படியே மகிமையிலே நீங்களும் நானும் பிரவேசிக் கும்படி அவரை உயிராய் நேசித்து வாழ்வதற்கு ஏற்ற கிருபைகளைத் தருவாராக. கர்த்தர் வருகிறார். மாரநாதா!!

**கர்த்தரின் வேலைக்காரன்,**
P.அற்புதராஜ் சாமுவேல்




# நற்செய்தி

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள சகோதரிகளுக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்.

**“தேவ தூதன் அவர்களை நோக்கி: இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்”.** அன்பு சகோதரிகளே, இயேசு என்பதற்கு இரட்சகர் என்பது பொருள். ஆதாம், ஏவாளின் கீழ்ப்படியாமையினாலே, உலகமே பாவத்திற்குள்ளாயிற்று. தேவ சாயலாக உண்டாக்கப்பட்ட மனிதன் தேவ சாயலை இழந்து விட்டான். எனவே இழந்த தேவ மகிமையை மீண்டும் மனுக்குலத்திற்குக் கொடுக்கும்படி தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை உலகத்திற்கு அனுப்ப சித்தம் கொண்டார்.

**“இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.”**

நம் இரட்சகராகிய இயேசுவும் பிதாவின் சித்தத்திற்குத் தம்மை முற்றிலுமாய் ஒப்புக்கொடுத்தார் (எபி. 10:5-7) – **“..தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன். புஸ்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்”. “இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாயாக என்றார்”** (ஏசாயா 7:14). ஏசாயா தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டபடியே கன்னியாகிய மரியாளை, தேவன் தம்முடைய குமாரனை சுமக்கும் ஓர் பாத்திரமாகத் தெரிந்துகொண்டார். மரியாள் தன்னை அர்ப்பணித்ததினாலே, தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். (யோவான் 3:16)

ஒருநாள் மேய்ப்பர்கள் வயல்வெளியிலே தங்கி, தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருக்கும்போது, ஓர் தேவதூதன் தோன்றி, **“இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான்”.** உடனே மேய்ப்பர்கள் கர்த்தரால் தங்களுக்குச் சொல்லப்பட்டதைப் பார்க்கும்படி, தீவிரமாய் போய் மரியாளையும், யோசேப்பையும் முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டு பணிந்துகொண்டார்கள். அந்தப் பிள்ளையைக்குறித்து சொல்லப்பட்டதை எங்கும் பிரசித்தம் பண்ணினார்கள். அன்பு சகோதரிகளே, பாவிகளாகிய நம்மை இரட்சிக்க, பிதாவாகிய தேவன் தம் ஒரே பேறான குமாரனை நமக்காக உலகத்திற்கு அனுப்பினார். இயேசு மீண்டும் உலகத்திற்கு வரப்போகிறார். குழந்தையாக அல்ல. மணவாளனாக. மணவாட்டியாகிய சபையை அழைத்துச் செல்ல வரப்போகிறார். கறைதிரை ஒன்றும் இல்லாத பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். (எபே. 5:27).

நாம் இயேசுவைக் குழந்தையாகவேக் கருதி, அவர் பிறந்ததை மாத்திரம் கொண்டாடிவிட்டு அவருடைய வருகைக்கு ஆயத்தமாகாமல் இருப்போமானால், நாம் தேவனால் கைவிடப்பட்டவர்களாய், பரிதாபப்படத்தக்கவர்களாயிருப்போம். அவரைச் சந்திக்க வேண்டுமானால், மனந்திரும்பி, பாவ மன்னிப்புக்கென்று மூழ்கி ஞானஸ்நானம் எடுத்து, பரிசுத்த ஆவியைப்பெற்று, வேறுபிரிக்கப்பட்ட பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்து, ஜெபத்திலும், வேத தியானத்திலும் உறுதியாயிருந்து, தெளிந்த புத்தியுள்ளவர்களாய், கர்த்தருக்குப் பிரியமானவைகளைச் செய்து, பயத்தோடும் நடுக்கத்தோடும் நம் இரட்சிப்பைக் காத்துக்கொண்டு, ஆத்துமாக்களை ஆயத்தப்படுத்தி, அவரது சித்தத்தை செய்வோமானால் அவரைச் சந்திக்க தேவன் கிருபை செய்வார்.

**“நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன். சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது அந்த மெல்லியவஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே”** (வெளி. 19:7,8).

*கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார் அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். இதுவே நற்செய்தி. நம் தேவனைச் சந்திக்க ஆயத்தப்படுவோம். கர்த்தர் கிருபை தருவாராக.*

**கர்த்தரின் பணியில்**

உங்கள் அன்பு சகோதரி,

எப்சிபா அற்புதராஜ்.



# அடிமையாக ஆண்டவருக்கு உன்னை ஒப்புக்கொடு!

# அடிமை

கர்த்தருடைய பரிசுத்த நாமம் மகிமைப்படுவதாக. எங்களுக்கு மிகவும் அருமையான அன்பு தம்பி தங்கைக்கு, ஆண்டவரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவரையும் வாழ்த்துகிறோம். இந்த வருஷத்தின் கடைசி மாத இதழில் 'அடிமை' என்ற தலைப்பில் நாம் தியானிக்க இருக்கிறோம். ஒரு கேள்வி தோன்றிற்று, என்னவென்றால் 'பாவத்தை எப்படி முழுமையாய் மேற்கொள்ளுவது' அதற்கு இணையான இன்னொரு கேள்வியும் – "எப்படி நம்முடைய ஓட்டத்தை கர்த்தருக்குள் ஜெயமாக ஓடி முடிப்பது?" என்று. இது ஏதோ பாலியல் சம்பந்தப்பட்ட, பணம் சம்பந்தப்பட்ட பாவத்தை மாத்திரம் அல்ல, மாறாக தேவனுக்கு எதிரிடையான எல்லாவற்றையும் மேற்கொள்ளுவது எப்படி என்பதைப் பற்றினது. இதைக் குறித்து யோசிக்கும்போது பின் வருகிற சில வசனங்கள் மனதில் தோன்றினது. ரோமர் 6:16 – 22

**"மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா? பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள். ..அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள். இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன்".**

*பிரியமானவர்களே, நீங்களும் நானும் நம்முடைய வாழ்க்கையில் ஒரு முழுமையான நிச்சயமான ஜெயஜீவியத்தை செய்யவேண்டுமென்றால், நாம் நம்மைத் தேவனுக்கு அடிமைகளாக மனப்பூர்வமாய் நம்மை நாமே ஒப்புக்கொடுக்கவேண்டும். அடிமை என்றால் என்ன? அடிமையாய் ஒப்புக்கொடுக்கும்போது என்ன நடக்கிறது? நம்மைநாமே அடிமையாய் ஒப்புக்கொடுக்க நமக்கு என்ன தேவை? என்று பார்க்கலாம்.*

**அடிமை என்றால் என்ன ? –** தனக்குரியவனல்ல, தன்னுடைய சித்தத்தை செயல்படுத்த முடியாதவன், சுய திட்டம் இல்லாதவன், சுதந்திரம் இல்லாதவன், உரிமை இல்லாதவன், தன்மீதே ஆதிக்கம் செலுத்த முடியாதவன். அவனுடைய உரிமையாளர் அவனை என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம். இது ஒரு சாதாரண விஷயம் அல்ல, எந்த மனிதனும், ஆம் இரட்சிக்கப்பட்ட அநேகர் தங்களை ஆண்டவருக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுக்க முழுமையாக முன்வருவது இல்லை. ஏன், இன்னும் சிலர் நாம் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பார்கள். ஆம் அது உண்மைதான். ஆனால், பிரியமானவர்களே நாம் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டிருந்தாலும், வேதம் சொல்லுகிறது **"சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும் உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல், தேவனுக்கு அடிமைகளாயிருங்கள்"** (1 பேதுரு 2:16). அப்படியென்றால் நம்மில் அநேகர் சுயாதீனத்தை சரியாகப் பயன்படுத்த பக்குவமில்லாதவர்களாக இருக்கிறபடியால், அந்த பக்குவத்தை அடையும்வரை நாம் நம்மை அடிமைகளாக மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுக்கவேண்டியது அவசியமே. பக்குவம் அடைவோமென்றால், அது இன்னும் நம்மை ஆண்டவருக்கு அடிமையாகவே ஒப்புக்கொடுக்க செய்யும். இந்த புரிதல் ஆச்சரியமானது.

**அப்படி அடிமையாய் ஒப்புக்கொடுக்கும்போது என்ன நடக்கிறது? –** தேவனுடைய பரிபூரணமான ஆளுகை நம்மீது வருகிறது, நாம் அவருடையவர்களாகவே மாறிவிடுகிறோம், நாம் அவருடைய சொத்தாக மாறுகிறோம், நம்மை பரிபூரணமாக உருவாக்குவதற்கு அவர் கையில் ஒப்புக்கொடுக்கிறோம். பிரியமானவர்களே, இப்படி அடிமையாய் ஒப்புக்கொடுக்கும் அனுபவத்தில்தான், நாம் தேவனுக்குரிய பாத்திரங்களாக உருவாக்கப்படுகிறோம். இப்படி உருவாக்கப்படுகிறதில் நாம் நம்மை அடிமைகளாகவே ஒப்புக்கொடுக்கவேண்டும். இந்த அனுபவத்தில்தான் 100/100 கிருபை நம்மீது காணப்படும் என்று நம்புகிறேன். மரியாள்: **"இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை.."** (லூக்கா 1:38) என்றாள். கிறிஸ்து தன்னில் உருவாகிறதற்கு அடிமையாய் ஒப்புக்கொடுத்ததால், முழுமையான கிறிஸ்துவை தனக்குள் இருந்து வெளிப்படுத்தினாள்.

**நம்மைநாமே அடிமையாய் ஒப்புக்கொடுக்க நமக்கு என்ன தேவை? –** நாம் இதே ரோமர் புஸ்தகத்தில் வாசிக்கும்போது, தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்ததை உணர்ந்து, அவருடைய கிருபையைச் சார்ந்து, தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறதை உணர்ந்தவர்களாக, சகலமும் நன்மைக்காகவே என்று அறிந்து, அவர் நம்மை பார்த்துக்கொள்ளுவார் என்ற முழு நிச்சயம் நமக்கு இருக்க வேண்டும்.

இதை வாசிக்கிற அன்பு தம்பி தங்கச்சி, நீங்கள் உங்களை மிகவும் தைரியமாக மனப்பூர்வமாக தேவனுக்கு அடிமையாக ஒப்புக்கொடுத்து பாருங்கள், உங்களை மிகப் பெரிய ஆவிக்குரியவர்களாக மகிமைக்குரியவர்களாக ஜெயஜீவியமுடையவர்களாக மாற்றி உங்களில் அவர் மகிமைப்படுவார். *சுயாதீனத்தை கொடுத்த தேவனைச் சரியாக புரிந்துகொண்டதற்கு அடையாளமே நாம் நம்மை அடிமையாய் ஒப்புக்கொடுப்பதே. தேவன்தாமே நமக்கு கிருபைசெய்வாராக. ஆமென்.*



# கேயாசி

Hai செல்லங்களா! எல்லாரும் எப்படி இருக்கீங்க? இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள். உங்களை மீண்டும் சந்திப்பதில் எனக்கு ரொம்ப சந்தோஷம். கடந்த மாதம் யாரைப் பற்றி படித்தோம்? உங்களுக்கு நினைவிருக்கா? நாகமானைப் பற்றி படித்தோம். நாகமானுக்கு எப்படி குஷ்டரோகத்திலிருந்து சுகம் கிடைத்தது என்று. ஒரு சிறுபெண் அதற்கு காரணமாயிருந்தாள் என்று பார்த்தோம் இல்லையா? இந்த மாதம் அந்த சம்பவத்தோடு தொடர்புடைய மற்றொரு நபரைக் குறித்துப் படிப்போமா? ஆமாம் குட்டீஸ், தலைப்பில இருக்கிறது போலவே கேயாசியை பற்றித்தான் பார்க்கப் போகிறோம். வாங்க கதைக்குள்ளே போகலாம்.

நாகமான் தனக்கு சுகம் கிடைத்தவுடன் தான் கொண்டுவந்த பரிசுப்பொருட்களை எலிசா தீர்க்கதரிசியினிடத்தில் கொடுத்தான். ஆனால் அவரோ வேண்டாம் என்று சொல்லி நாகமானை அனுப்பிவிட்டார். நாகமானுக்கு தனக்கு சுகம் கிடைத்ததில் ரொம்ப சந்தோஷம். அவன் தன்னுடைய ஊருக்குப் புறப்பட்டு கொஞ்ச தூரம் போனபோது எலிசா தீர்க்கதரிசியின் வேலைக்காரனான கேயாசி என்பவன் நாகமான் கொண்டு வந்ததை என்னுடைய எஜமான் வாங்காமல் விட்டுவிட்டார். நான் அவன் பிறகாலே ஓடிச் சென்று அதை வாங்கி வருவேன் என்று சொல்லி அவனுடைய இரதத்திற்குப் பின்னே ஓடினான். அவன் ஓடி வருவதை நாகமான் கண்டு, உடனே தன்னுடைய இரதத்தை நிறுத்தி அவனுக்கு எதிர்கொண்டு போக இரதத்திலிருந்து குதித்து: சுகசெய்தியா என்று கேட்டான். அதற்கு அவன்: சுகசெய்திதான் தீர்க்கதரிசிகளின் புத்திரரில் இரண்டு வாலிபர் இப்பொழுதுதான் எப்பிராயீம் மலைத்தேசத்திலிருந்து என்னிடத்தில் வந்தார்கள் அவர்களுக்கு ஒரு தாலந்து வெள்ளியையும், இரண்டு மாற்றுவஸ்திரங்களையும் தரவேண்டும் என்று கேட்க, என் எஜமான் என்னை அனுப்பினார் என்றான்.

அதற்கு நாகமான்: தயவுசெய்து, இரண்டு தாலந்தை வாங்கிக்கொள் என்று சொல்லி, அவனை வருந்தி, இரண்டு தாலந்து வெள்ளியையும், இரண்டு பைகளில் இரண்டு மாற்றுவஸ்திரங்களோடே கட்டி, அவனுக்கு முன்பாகச் சுமந்து போக, தன் வேலைக்காரரான இரண்டுபேர்மேல் வைத்தான். அவன் மேட்டண்டைக்கு வந்தபோது, அவன் அதை அவர்கள் கையிலிருந்து வாங்கி, வீட்டிலே வைத்து, அந்த மனுஷரை அனுப்பிவிட்டான். அவர்கள் போய்விட்டார்கள். பின்பு அவன் உள்ளே போய்த் தன் எஜமானுக்கு முன்பாக நின்றான் கேயாசியே, எங்கேயிருந்து வந்தாய் என்று எலிசா அவனைக் கேட்டதற்கு, அவன்: உமது அடியான் எங்கும் போகவில்லை என்றான். அப்பொழுது அவன் இவனைப் பார்த்து: அந்த மனுஷன் உனக்கு எதிர்கொண்டுவர தன் இரதத்திலிருந்து இறங்கித் திரும்புகிறபோது என் மனம் உன்னுடனேகூடச் செல்லவில்லையா? **”பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும் ஒலிவத்தோப்புகளையும் திராட்சத்தோட்டங்களையும் ஆடுமாடுகளையும் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா?”** ஆகையால் நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததியாரையும் என்றைக்கும் பிடித்திருக்கும் என்றான் உடனே அவன் உறைந்த மழை நிறமான குஷ்டரோகியாகி, அவன் சமுகத்தை விட்டுப் புறப்பட்டுப் போனான். நாகமான் கொண்டு வந்த பொருட்கள்மேல் ஆசைப்பட்டு அதை வாங்கின கேயாசியின் நிலையைப் பார்த்தீங்களா குட்டீஸ்? மற்றவர்களுடைய பொருட்கள் மேல நமக்கு எப்பவுமே ஆசை வரக்கூடாது. நாகமான் அதை எலிசா தீர்க்கதரிசிக்கு காணிக்கையாகக் கொடுப்பதற்காகத்தான் கொண்டு வந்தான். ஆனால் அதைப் பார்த்த கேயாசிக்கு அதன் மேல் ஆசை வந்தது. அந்த ஆசை அவனை விடவில்லை அதை எப்படியாவது போய் வாங்கி வந்து விட வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கியது. அதற்காக, அதன் பின்னே ஓட வைத்தது. நாகமானிடத்தில் எனக்கு வேண்டும் என்று கேட்டால் அவன் அதை தரமாட்டான் என்று எண்ணி, அதை அடைந்துவிட பொய் சொல்லவும் துணிய வைத்தது அந்த ஆசை. பின்பு அவனை ஏமாற்றி வாங்கி வந்து பின் எலிசாவிடம் எதுவும் நடக்காதது போல நடந்துகொள்ள வைத்தது. பொருளாசை செய்யும் காரியத்தைப் பாத்தீங்களா? அது ஒரு மனிதனை எப்படியெல்லாம் நடந்துகொள்ள செய்கிறது? எத்தனைப் பொய்! எத்தனை ஏமாற்று வேலை!

*வேண்டாம் குட்டீஸ், மற்றவர்களின் பொருட்கள் மேல நமக்கு ஆசையே வேண்டாம்! அது நம்மை பல்வேறு தவறுகளைச் செய்ய வைக்கும். அது மிகவும் ஆபத்தானது. பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்றும், போதும் என்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே நமக்கு மிகுந்த ஆதாயம் என்றும் வேதம் நமக்கு போதிக்கிறது. So, மற்றவர் பொருள் மேல ஆசைப்படாம, நமக்கு இருக்கிறது போதும் என்று இருப்போம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.*

**ஜெபம்**

**அன்புள்ள பிதாவே, இந்த சம்பவத்தில் வரும் கேயாசியைப் போல் நாங்கள் மற்றவர் பொருள்மேல் ஆசைப்படாதபடி எங்களுக்கு இருக்கிறது போதுமென்றிருக்க உதவி செய்யும்! இயேசுவின் மூலம் ஜெபிக்கிறேன் பிதாவே, ஆமென்!**

# ஊழியனே!!

# மூன்று காரியங்களுக்கு எச்சரிக்கையாயிரு!!

இயேசுகிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் உடன் ஊழியர்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார். **“விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்”** (மாற்கு 16:16) என்ற வசனத்தின்படி, பாவிகளாய் இருந்தவர்கள் இயேசு பாவிகளை இரட்சிக்க வந்தார் என்பதை விசுவாசித்து, இயேசுவினிடத்தில் தங்கள் பாவங்களை அறிக்கையிடுகிறார்கள். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் என்ற வசனத்தின்படி, ஆண்டவர் என்னுடைய பாவங்களையெல்லாம் மன்னித்தார் என்று விசுவாசிக்கிறார்கள். அப்படி விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றவர்களே இரட்சிக்கப்பட்டவர்கள். **“இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார்”** (அப். 2:47) என்ற வசனத்தின்படி, இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் சபையிலே சேர்க்கிறார். அப்படியானால் இரட்சிக்கப்படுகிறவர்களின் கூடுகைதான் சபை. **“என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன்”** (1 தீமோ. 1:12) என்ற வசனத்தின்படி, அருமையான ஊழியனே உன்னையும் என்னையும் அப்படிப்பட்ட சபைக்கு உண்மையுள்ளவனென்றெண்ணி ஊழியக்காரனாக வைத்தார். **“நாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், சுன்னத்துக்காரருக்கு எச்சரிக்கையாயிருங்கள்”** (பிலி. 3:2) என்ற வசனத்தின்படி, சபையிலே ஊழியக்காரராக இருக்கக்கூடிய நாம் இந்த மூன்று காரியங்களுக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

## 1. நாய்களுக்கு

**“நாயானது தான் கக்கினதைத் தின்னும்படி திரும்புவதுபோல, மூடனும் தன் மூடத்தனத்துக்குத் திரும்புகிறான்”** (நீதி. 26:11) என்ற வசனத்தின்படி, நாயானது தான் கக்கினதைத் திரும்ப தின்னுவது போல இன்றைக்கு அநேக ஊழியர்களும் விசுவாசிகளும் தேவனிடத்தில் வேண்டாமென்று அறிக்கையிட்ட பாவங்களை மீண்டும் செய்கிறவர்களாயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பின்வாங்கிப்போனவர்களையே நாய்களுக்கு ஒப்பிடுகிறார். அருமையான ஊழியனே, ஒருநாளும் நீ பாவம் செய்து பின்வாங்கிப்போய் நாயாக மாறிவிடாதே. அல்லவென்றால் பாவம் செய்து பின்வாங்கிப்போன விசுவாசிகளோடோ, ஊழியர்களோடோ ஐக்கியம் கொள்ளாதே. ஒருவன் ஏன் பின்வாங்கிப்போகிறான் என்றால் தேவன்மேல் ஆதியிலே கொண்டிருந்த அன்பு காலங்கள் கடந்துபோகும்போது குறைந்துபோவதால். உதாரணமாக இஸ்ரவேலரை தேவன் வனாந்தரத்தில் வழிநடத்தினபோது அவர்களுக்கு தூதர்கள் சாப்பிடுகிற மன்னாவைக் கொடுத்தார். முதலில் மன்னா அவர்களுக்கு தேனிட்ட பனியாரம் போல சுவையாக இருந்து. ஆனால் நாட்கள் கடந்தபோது அதே மன்னா அவர்களுக்கு எண்ணெய் போலிருந்தது. காலங்கள் கடக்க கடக்க இப்பொழுது மன்னா அவர்களுக்கு வேண்டா வெறுப்பாக மாறிப்போனது. அருமையான ஊழியனே இன்றைக்கும் தேவனால் இரட்சிக்கப்பட்டு அவரிடத்தில் அன்புகூர்ந்து வாழ்ந்த அநேக ஊழியர்களும் விசுவாசிகளும் காலங்கள் கடந்துபோனதால் தேவன் மேல் இருந்த அன்பு குறைந்துபோய் பாவம் செய்து நாய்களாக மாறிவிட்டார்கள்.

உதாரணமாக பன்னிரெண்டு அப்போஸ்தலர்களிலே யூதாஸ்காரியோத் இருந்தான். அவனிடத்தில் பணப்பையை கொடுக்கும் அளவிற்கு நம்பிக்கையுள்ளவனாய் இருந்தான். ஆனால் காலங்கள் கடந்தபோது அதாவது மூன்றரையாவது வருடத்திலே அவரை விரோதிக்கிறவர்களிடத்திலே அவரைக் காட்டிக்கொடுக்கிறவனாய் மாறிப்போனான். இன்றைக்கும் இரட்சிக்கப்பட்டவர்களோ ஊழியம் செய்கிறவர்களோ ஆரம்பத்திலே இயேசுவோடு அன்பாயிருந்து பாவங்களுக்கு விலகியிருந்தார்கள். ஆனால் காலங்கள் கடந்துபோனபோது இயேசுவின்மேல் வைத்த அன்பு அவர்களுக்கு குறைந்துபோனதினால் பாவம் செய்து நாய்களாய் மாறிப்போனார்கள்.



**“ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்”** (எபி. 6:4–6)

என்ற வசனங்களின்படி, இரட்சிக்கப்பட்டவர்கள், பரம ஈவை ருசித்துப்பார்த்தவர்கள், தேவனுடைய பெலன்களையும் ருசித்துப் பார்த்தவர்கள் மறுபடியும் பாவம் செய்து மறுதலிப்பார்களானால் அவர்கள் இயேசுகிறிஸ்துவை மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறார்கள்.

அதோடுமாத்திரமல்ல **"சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பானென்பதை யோசித்துப்பாருங்கள்"** (எபி. 10:26-29) என்ற வசனங்களின்படி, சத்தியமாகிய இயேசுவை அறிந்தபின்பு அவர்கள் மனப்பூர்வமாய் பாவம் செய்கிறவர்களாயிருந்தால் இயேசுவை காலின்கீழ் மிதித்து தங்களைப் பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தம் என்று எண்ணி கிருபையின் ஆவியை நிந்திக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களே நாய்கள். இப்படிப்பட்டவர்களுக்கு எச்சரிக்கையாயிரு.

RENEW NOW
தயவுசெய்து உங்கள் ஆண்டு சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

ஒருவேளை இப்படிப்பட்டவர்களுக்கு நீ எச்சரிக்கையாயிராமல் நீ அவர்களோடே ஐக்கியம் கொள்ளுவாயானால் நீயும் அவர்களுடைய குணாதிசயங்களை உடையவனாய் மாறிப்போவாய். அதோடுமாத்திரமல்ல அப்படிப்பட்ட பாவம்செய்து இயேசுவை சிலுவையில் அறைகிறவர்களுக்கும் அவரை காலின்கீழ் மிதிக்கிறவர்களுக்கும் நீயும் பங்காளியாக மாறிவிடுகிறாய். ஆகவே இப்படிப்பட்டவர்களுக்கு எச்சரிக்கையாயிரு. **"நாய்களும், சூனியக்காரரும், விபசாரக்காரரும், கொலைபாதகரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள்"** (வெளி. 22:15) என்ற வசனத்தின்படி, பின்மாற்றக்காரர்களாகிய நாய்கள் பரலோக இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லையென்பதை அறிந்து அவர்களுக்கு எச்சரிக்கையாயிரு.

## 2. பொல்லாத வேலையாட்களுக்கு

கோடிக்கணக்கான இரட்சிக்கப்பட்டவர்கள் இருக்க உன்னையும் என்னையும் உண்மையுள்ளவன் என்று எண்ணி, உத்தமனென்று எண்ணி இந்த சுவிசேஷத்தை தேவன் நம்மிடத்தில் கொடுத்தார். ஆகவே அருமையான ஊழியனே நீ தேவனுக்கு முன்பாக உண்மையான ஊழியக்காரனாய் **"கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவன் தேவனுக்குப் பிரியனும் மனுஷரால் அங்கிகரிக்கப்பட்டவனுமாயிருக்கிறான்"** (ரோமர் 14:18) என்ற வசனத்தின்படி, கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவன் தேவனுடையப் பார்வையிலே உண்மையாயிருக்க வேண்டும். அதோடுமாத்திரமல்ல மனுஷர்கள் மத்தியிலும் நல்ல சாட்சி உடையவனாயிருக்க வேண்டும். இவனே தேவனுக்குப் பிரியமான ஊழியக்காரன். அப்படியானால் பொல்லாத ஊழியக்காரன் எப்படியிருப்பான்?

### அ) வயிற்றுக்கு ஊழியம் செய்கிறவன்

வயிற்றுக்கு ஊழியம் செய்கிறவன் எப்படி இருப்பான்? **"அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்"** (ரோமர் 16:17,18) என்ற வசனங்களின்படி, வசனத்தைக் கற்றுக்கொண்டு தேவனுக்கு முன்பாக கபடமில்லாமல் வாழ்ந்துகொண்டிருக்கிற விசுவாசிகளை, தவறான உபதேசங்களைப் போதித்து அவர்களைத் தங்கள் பட்சமாக இழுத்துக்கொள்ளுவார்கள். இவர்கள் வஞ்சிக்கிறவர்கள். தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்கிறவர்கள். அருமையான ஊழியனே இன்றைய ஆவிக்குரிய உலகிலே ஊழியர்களிலே அநேகர் வயிற்றுக்கு ஊழியம் செய்து கபடில்லாதவர்களை வஞ்சித்து தங்கள் வசமாய் சேர்த்துக்கொள்ளுகிறவர்களாயிருக்கிறார்கள். அவர்களுக்கு எச்சரிக்கையாயிருந்து அவர்களை விட்டு விலகு.

### ஆ) பெண்ணுக்காக ஊழியம் செய்கிறவன்

**"இஸ்ரவேல் ஒரு பெண்ணுக்காக ஊழியஞ்செய்து"** (ஓசியா 12:12) என்று யாக்கோபைக் குறித்து வேதம் சொல்லுகிறது. அதுபோல இன்றைக்கும் பெண்களை குறியாக வைத்து அவர்களை தங்கள் வசப்படுத்திக்கொள்ளும்படிக்கு அநேக ஊழியர்கள் எழும்பியிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களை நீ அறிவாயானால் அவர்களை விட்டு விலகு. **"பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளால் இழுப்புண்டு, எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண்பிள்ளைகளுடைய வீடுகளில் இப்படிப்பட்டவர்கள் நுழைந்து, அவர்களை வசப்படுத்திக்கொள்ளுகிறார்கள். யந்நேயும் யம்பிரேயும் மோசேக்கு எதிர்த்து நின்றதுபோல இவர்களும் சத்தியத்துக்கு எதிர்த்து நிற்கிறார்கள். இவர்கள் துர்ப்புத்தியுள்ள மனுஷர்கள், விசுவாசவிஷயத்தில் பரீட்சைக்கு நில்லாதவர்கள்"** (2 தீமோ. 3:6-8) என்ற வசனங்களின்படி, இன்றைக்கும் அநேக ஊழியர்கள் புருஷனோ, பிள்ளைகளோ இல்லாத வேளையில் சகோதரிகள் மட்டும் தனியாக இருக்கும் நேரத்தில் அவர்களோடு பேச வேண்டும் என்று எண்ணுகிறார்கள்.





அதோடுமாத்திரமல்ல தகப்பனோ தாயோ உடன்பிறந்தவர்களோ இல்லாத வேளையில் வாலிபப் பெண்பிள்ளைகள் தனியாக இருகிற வேளையில் அவர்களோடுகூட நேரங்களைச் செலவிட்டு அவர்களைத் தங்கள் வசப்படுத்திக்கொள்ளுகிறார்கள். நான் சில ஊழியர்களை அறிவேன். அவர்கள் திருமணம் செய்து பிள்ளைகளோடுகூட ஊழியம் செய்தவர்கள், தங்களுடைய மனைவி பிள்ளைகளை விட்டுவிட்டு அடுத்தவர்களுடைய மனைவியோடுகூட ஓடினவர்கள் உண்டு. அதோடுமாத்திரமல்ல தன் மனைவி பிள்ளைகளோடு ஊழியம் செய்தவர்கள் சபையில் உள்ள வாலிபப் பெண்களோடுகூட ஐக்கியங்கொண்டு தங்கள் மனைவி பிள்ளைகளை விட்டுவிட்டு அவர்களோடுகூட ஓடினவர்களும் உண்டு. இப்படிப்பட்டவர்களோடே நீ ஐக்கியம் கொள்ளாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து அவர்களை விட்டு விலகு.


### இ) பிசாசின் ஊழியக்காரன்

**"அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத்தக்கதாயிருக்கும்"** (2 கொரி. 11:14,15) என்று வேதம் சொல்லுகிறது. ஒளியின் தூதன் நல்லவன் தான். ஒளி என்பது இயேசு. அவருக்கு பணிவிடை செய்கிற தூதன் நல்லவன். ஆனால் சாத்தானும் இயேசுவுக்கு பணிவிடை செய்கிற தூதனைப்போல் அநேகரை இறக்கியிருக்கிறான். அவர்கள் இயேசுவின் ஊழியக்காரர்களைப்போல் காணப்படுவார்கள். ஆனால் அவர்களுடைய குணாதிசயங்கள் எப்படியிருக்கும்? **"அவனுடைய காவற்காரர் எல்லாரும் ஒன்றும் அறியாத குருடர் அவர்களெல்லாரும் குலைக்கமாட்டாத ஊமையான நாய்கள் தூக்கமயக்கமாய்ப் புலம்புகிறவர்கள், படுத்துக்கொள்ளுகிறவர்கள், நித்திரைப் பிரியர் திருப்தியடையாமலிருக்கும் பெருவயிற்று நாய்கள் பகுத்தறிவில்லாத மேய்ப்பர் அவர்களில் ஒவ்வொருவனும் தன் தன் வழியையும், அவனவன் தன் தன் மூலையிலிருந்து தன் தன் பொழிவையும் நோக்கிக்கொண்டிருக்கிறான். வாருங்கள், திராட்சரசத்தைக் கொண்டுவருவேன், மதுவைக் குடிப்போம் நாளையத்தினம் இன்றையத்தினம்போலவும், இதற்கு அதிகமாகவும் இருக்கும் என்பார்கள்"** (ஏசாயா 56:10–12) என்ற வசனங்களின்படி, வேதத்தைக்குறித்து சரியான அறிவில்லாதவர்களய் இருப்பார்கள், சபைக்கு வசனம் சொல்லி எச்சரிக்கமாட்டார்கள்.

எப்பொழுதும் படுத்துக்கொள்ளவேண்டுமென்றும் நித்திரை செய்யவேண்டுமென்றும் இருப்பார்கள். என்னக் கிடைத்தாலும் திருப்தியடையாமல் இருப்பார்கள். பகுத்தறிவில்லாதிருப்பார்கள், அவர்கள் தங்கள் வழியிலே நடப்பார்கள். தங்களுக்கு என்ன கிடைக்கும் என்ற நோக்கத்தோடு வாழ்வார்கள். பாவம் செய்வார்கள். நாமும் பாவம் செய்வோம் என்பார்கள். இப்படிப்பட்டவர்களே பிசாசின் ஊழியக்காரர்கள். இப்படிப்பட்டவர்களுக்கு எச்சரிக்கையாயிருந்து இவர்களை விட்டு விலகு.

### ஈ) கள்ளப்போதகன்

**"சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு விலகியிரு. அவைகளால் (கள்ளப்போதகர்களான) அவர்கள் அதிக அவபக்தியுள்ளவர்களாவார்கள் அவர்களுடைய வார்த்தை அரிபிளவையைப்போலப் படரும் இமெநேயும் பிலேத்தும் அப்படிப்பட்டவர்கள் அவர்கள் சத்தியத்தை விட்டு விலகி, உயிர்த்தெழுதல் நடந்தாயிற்றென்று சொல்லி, சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடுகிறார்கள்"** (2 தீமோ. 2:16–18) என்று வேதம் சொல்லுகிறது. வேதத்தின்படியே நடக்கிறவர்கள் சீர் உள்ளவர்களாயிருப்பார்கள். ஆனால் வேதத்திற்கு மாறாக பேசுகிற பேச்சுகளே வீண்பேச்சுகள். அதாவது மனசாட்சியின்படி பேசுகிறதே வீண்பேச்சு. இன்றைக்கு சபைகளிலே




வேதத்திற்கு மாறாக மனசாட்சியின்படி போதிக்கிறார்கள். இவர்கள் அநேகரை வஞ்சித்து தேவனைவிட்டு விலக்கி விடுகிறார்கள். **"கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள் அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள். அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள் அவர்கள்நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும். பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக்கொள்ளுவார்கள். பூர்வகாலமுதல் அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஆக்கினை அயர்ந்திராது, அவர்களுடைய அழிவு உறங்காது"** (2 பேதுரு 2:1–3) என்ற வசனங்களின்படி, இந்த கள்ளப்போதகர்கள் வேதப்புரட்டுகளை தந்திரமாய் நுழையப்பண்ணுவார்கள்.

அவர்களே வேதத்திற்கு மாறாய் மனசாட்சியின்படி நடந்து தங்களுக்கு தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுகிறார்கள். இவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள். இவர்கள் பொருளாசையுடையவர்களாய் தந்திரமான வார்த்தைகளாலே ஜனங்களைத் தங்கள் வசப்படுத்திக்கொள்ளுகிறார்கள். தேவனிடத்தில் சேர்க்க வேண்டிய ஜனத்தை தங்கள் வசமாய் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். ஆகையால் அவர்கள் முடிவு அழிவு. அருமையான ஊழியனே இப்படிப்பட்ட ஊழியர்களை நீ அறிவாயானால் அவர்களை விட்டு விலகு. இப்படிப்பட்ட பொல்லாத ஊழியர்களுக்கு எச்சரிக்கையாயிரு.

### 3. சுன்னத்துக்காரர்களுக்கு

மாம்ச விருத்தசேதனம் பண்ணுகிறவர்களே சுன்னத்துக்காரர்கள். அதாவது அப்படிப்பட்டவர்கள் நியாயப் பிரமாணத்தின்படி வாழக்கூடியவர்கள். **“மேலும், விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளுகிற எந்த மனுஷனும் நியாயப் பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றக் கடனாளியாயிருக்கிறான் என்று மறுபடியும் அப்படிப்பட்டவனுக்குச் சாட்சியாகச் சொல்லுகிறேன். நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்”** (கலா. 5:3,4) என்ற வசனங்களின்படி, இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லக்கூடியவர்கள் நியாயப்பிரமாணத்தின்படி வாழ விரும்பினால் அவர்கள் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தவர்களாவார்கள். இயேசு நியாயப்பிரமாணத்தின்படி வாழ்ந்த காலத்தில் இருந்த ஒரு யூதர். ஆகவேதான் இயேசு நான் நியாயப்பிரமாணத்தை அழிக்க அல்ல அதை நிறைவேற்ற வந்தேன் என்றார்.

வேதம் என்ன சொல்லுகிறது **“விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்”** (ரோமர் 10:4) என்ற வசனத்தின்படி, இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற எவனுக்கும் இயேசு நியாயப்பிரமாணத்தின் முடிவாய் மாறிவிட்டார். நியாயப் பிரமாணத்தை எப்படி முடித்தார்? **“நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து”** (கொலோ. 2:14) என்ற வசனத்தின்படி, நமக்கு எதிரிடையாகவும் விரோதமாகவும் இருந்த கையெழுத்தாகிய கட்டளைகளையும் நியாயப் பிரமாணத்தையும் நடுவில் இராதபடிக்கு எடுத்து சிலுவையிலே ஆணியடித்தார்.

எப்படி நமக்கு எதிரிடையாக இருந்தது? **“இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் இருக்கையில், ஓய்வுநாளில் விறகுகளைப் பொறுக்கிக்கொண்டிருந்த ஒரு மனிதனைக் கண்டுபிடித்தார்கள். விறகுகளைப் பொறுக்கின அந்த மனிதனைக் கண்டுபிடித்தவர்கள், அவனை மோசே ஆரோன் என்பவர்களிடத்துக்கும் சபையார் அனைவரிடத்துக்கும் கொண்டுவந்தார்கள். அவனுக்குச் செய்யவேண்டியது இன்னதென்று தீர்க்கமான உத்தரவு இல்லாதபடியினால், அவனைக் காவலில் வைத்தார்கள். கர்த்தர் மோசேயை நோக்கி: அந்த மனிதன் நிச்சயமாய்க் கொலைசெய்யப்படவேண்டும் சபையார் எல்லாரும் அவனைப் பாளயத்திற்குப் புறம்பே கல்லெறியக்கடவர்கள் என்றார். அப்பொழுது சபையார் எல்லாரும் கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே, அவனைப் பாளயத்திற்குப் புறம்பே கொண்டுபோய் கல்லெறிந்தார்கள். அவன் செத்தான்”** (எண். 15:32-36) என்று வேதம் கூறுகிறது.

அதாவது நியாயப்பிரமாணத்தின் காலத்தில் ஓய்வுநாளில் ஒரு வேலையும் செய்யக்கூடாது. ஆனால் ஒருவன் ஓய்வுநாளிலே விறகுகளைப் பொறுக்கினபடியால், அவனைக் கல்லெறிந்து கொல்லும்படி தேவன் கட்டளையிட்டார். நியாயப்பிரமாணத்தின்படி, எவைகளை சாப்பிட வேண்டும் என்றும் எவைகளை சாப்பிடக்கூடாது என்றும் தேவன் கட்டளையிட்டிருக்கிறார். அப்படியே சாப்பிடக்கூடாதவைகளை சாப்பிட்டால் அவர்களுக்கு உடனே தண்டனை கிடைக்கும். **“நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார். ஆகையால், போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகைநாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வுநாட்களையுங்குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது. அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது”** (கொலோ. 2:14-17) என்ற வசனங்களின்படி, நியாயப்பிரமாணமானது நிழல். இயேசு பொருள்.

---

**நமது சபையின் சார்பாக**
@ZionChurch Poonamallee
**என்ற சேனலில் கர்த்தருடைய வார்த்தை ஒளிபரப்பப்படுகிறது**

---

பொருளாகிய இயேசு வந்தபிறகு நியாயப் பிரமாணமாகிய (மேற்சொல்லப்பட்ட) நிழல் தேவையில்லை. இப்பொழுது இயேசு என்ன சொல்லுகிறார்? **“ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமற்போனால், அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை. நான் உலகத்தை நியாயந்தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்கவந்தேன். என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்”** (யோவான் 12:47,48) என்று இயேசு கூறுகிறார். நியாயப் பிரமாணத்தின் காலத்தில் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாத பட்சத்தில் உடனே தண்டனை. ஆனால் இப்பொழுதோ இயேசு சொன்ன வசனங்களின்படி வாழாத பட்சத்தில் உடனே அவர் நியாயம் விசாரித்து தண்டனைக் கொடுப்பதில்லை. ஆனால் கடைசி நாளில் இயேசு சொன்ன வசனமே நம்மை நியாயந்தீர்க்கும். **“இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப் பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே”** (கலா. 3:24,25) என்று வேதம் கூறுகிறது.



அருமையான ஊழியக்காரனே, இயேசுகிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்திருக்கிற நாம் நியாயப்பிரமாணத்தின் படி செய்ய முடியாது. காரணம் நியாயப்பிரமாணம் நம்மை இயேசுவினிடத்தில் வழிநடத்துகிற வாத்தியாராய் மாத்திரமே இருந்தது. ஆனால் இயேசுவின்மேல் விசுவாசம் வைத்து நீதிமானாய் மாறினபின்பு நாம் வாத்தியாராகிய நியாயப் பிரமாணத்திற்குக் கீழானவர்கள் அல்ல என்பதை மறந்துவிடக் கூடாது.

**“நியாயப்பிரமாணத்தை அறிந்திருக்கிறவர்களுடனே பேசுகிறேன். சகோதரரே, ஒரு மனுஷன் உயிரோடிருக் குமளவும் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகிறதென்று அறியாமலிருக்கிறீர்களா? அதெப்படியென்றால், புருஷனையுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக் குமளவும் நியாயப்பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந் தனைக்கு உட்பட்டிருக்கிறாள் புருஷன் மரித்த பின்பு புருஷனைப்பற்றிய பிரமாணத்தினின்று விடுதலையாயிருக் கிறாள். ஆகையால், புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம்பண்ணினால் விபசாரியென் னப்படுவாள் புருஷன் மரித்தபின்பு அவள் அந்தப் பிரமாணத் தினின்று விடுதலையானபடியால், வேறொரு புருஷனை விவாகம்பண்ணினாலும் விபசாரியல்ல. அப்படிப்போல, என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப் பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்”** (ரோமர் 7:1–4) என்று வேதம் கூறுகிறது.

அதாவது ஒரு ஸ்திரீக்கு இரண்டு புருஷன் இருந்தால் விபசாரம். ஒருவேளை தன் புருஷன் மரித்துவிட்டால் அவள் வேறொரு புருஷனை விவாகம்பண்ணினால் அது விபசாரம் அல்ல. ஆனால் புருஷன் உயிரோடிருக்கும்போதே வேறொருவனோடு வாழ்ந்தால் அது விபசாரம். அதுபோல கிறிஸ்துவோடு உடன்படிக்கைப்பண்ணி கிறிஸ் துவினுடையவர்களாய் கனிகொடுக்கிறவர்களாய் இருக்க வேண்டுமானால் நியாயப்பிரமாணத்திற்கு மரித்து விட வேண் டும்.

ஒருவன் கிறிஸ்துவினுடையவனாயிருந்து நியாயப் பிரமாணத்தின்படியும் செய்வானானால் அது ஆவிக்குரிய விபசாரம். அருமையான ஊழியக்காரனே, நியாயப்பிரமாணத் தைக் கைக்கொள்ளுகிற சுன்னத்துக்காரர்களுக்கு எச்சரிக் கையாயிருந்து அவர்களை விட்டு விலகு.

**“பேதுரு ஆறாம் மணிநேரத்தில் ஜெபம்பண்ணும்படி மேல் வீட்டில் ஏறினான். அவன் மிகுந்த பசியடைந்து சாப்பிட மனதாயிருந்தான் அதற்கு அவர்கள் ஆயத் தம்பண்ணுகையில், அவன் ஞானதிருஷ்டியடைந்து, வானம் திறந்திருக்கிறதாகவும், நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும், அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட் டுமிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும், கண்டான். அல்லாமலும் பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று. அதற்குப் பேதுரு: அப்படியல்ல, ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான். அப்பொழுது: தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. மூன்றாந்தரமும் அப்படியே**



**உண்டாயிற்று. பின்பு அந்தக் கூடு திரும்ப வானத்துக்கு எடுத் துக்கொள்ளப்பட்டது”** (அப். 10:9–16) என்று வேதம் கூறுகிறது. யூதர்கள் தீட்டுள்ளதும் அருவருப்பானதுமான யாதொன் றையும் புசிக்க மாட்டார்கள். ஆகவே பேதுரு நான் இவைகளை ஒருக்காலும் புசித்ததில்லை என்றான். தேவன் அதற்கு நான் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்றார். ஆகவே இன்றைக்கு எதை வேண்டுமானாலும் புசிக் கலாம். ஆனால் **“விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும், நெருக் குண்டு செத்ததிற்கும், இரத்தத்திற்கும், விலகியிருக்கும்படி அவர்களுக்கு நாம் எழுதவேண்டுமென்றும் நான் தீர்மானிக் கிறேன்”** (அப். 15:20) என்று வேதம் கூறுகிறது.

அப்படியானால் இப்பொழுதிருக்கிற சபையாராகிய நாம்:

- **விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளை சாப்பிடக்கூடாது**
- **நெருக்குண்டு செத்ததிற்கும் அதாவது இரத்தம் வராமல் நெருக்குண்டு செத்த பறவைகளையோ மிருகங்களையோ சாப்பிடக்கூடாது**
- **இரத்தம் சாப்பிடக்கூடாது**

இவைகளெல்லாம் இயேசுகிறிஸ்துவைப் பின் பற்றுகிற நமக்கு கொடுக்கப்பட்டவைகள். அதோடுமாத்திரமல் ல நியாயப்பிரமாணத்தின் காலத்தில் ஓய்வுநாள் சனிக்கிழமை. அது நிழல் பொருள் இயேசு. இப்பொழுது ஓய்வுநாள் இந்த நாளில்தான் கொண்டாட வேண்டும் என்று இயேசு எதுவும் சொல்லவில்லை. நாட்களை விசேஷித்துக்கொள்ளுகிறவன் கர்த்தருக்கென்று விசேஷித்துக்கொள்ளுகிறான். அப்படியே இன்றைக்கு எந்த நாளிலும் ஓய்வுநாள் கொண்டாடலாம். ஆகவே அருமையான ஊழியனே, 1. நாய்களுக்கும், 2. பொல் லாத வேலையாட்களுக்கும், 3. சுன்னத்துக்காரர்களுக்கும் (நியாயப்பிரமாணக்காரர்களுக்கும்) எச்சரிக்கையாயிருந்து அவர்களுக்கு விலகியிருந்து, உன்னை சுத்தவானாகக் காத் துக்கொள். கர்த்தர் வருகிறார். மாரநாதா!!

**நமது போதகர் பங்கேற்கும் கூட்டங்கள்**

| நாள் | இடம் | தொடர்புக்கு |
|---|---|---|
| டிசம்பர் 15 | அயனாவரம் | 9934144907 |
| ஜனவரி 16-18 | தொண்டி | 9751525475 |
| ஜனவரி 19 | அயனாவரம் | 9934144907 |

# ஜேம்ஸ் ஹாப்

## (1789-1847)

கனம் ஜேம்ஸ் ஹாப் 1789 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பிறந்தார். கேம்ப்ரிட்ஜ் சர்வ கலா சாலையில் பட்டம் பெற்ற இவர், வேத கலா சாலையில் இணைந்து அதிலும் பட்டம் பெற்றார். 1814 ஆம் ஆண்டு போதகராக அபிஷேகம் பெற்றார். சபை குருவாக இருக்கும்போது மிஷனரி வாழ்வையே சிறந்ததாகக் கருதினார். எனவே மிஷனரி ஊழியத்தைக் காட்டிலும் சிறந்ததோர் பணி வேறொன்றுமில்லை என்று எண்ணித் தன்னை ஒரு மிஷனரியாக அர்ப்பணித்தார். ஒருநாள், ஒரு மிஷனரி கூட்டம் ஒன்றிற்கு சென்றிருந்தார். அங்கே செய்தி கொடுத்துக்கொண்டிருந்தவர் வெளிநாடுகளில் உள்ள மக்களுக்கு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க வேண்டிய அவசியத்தை ஆணித்தரமாக உணர்த்தினார். அவர் கூறிய வார்த்தைகள் ஜேம்ஸின் இதயத்தில் பசுமரத்தாணிபோல பதிந்தது. எனவே, அதற்கான வாய்ப்பிற்காகக் காத்திருந்தார். இந்தியாவிற்கு மிஷனரியாக தன்னை அர்ப்பணித்த இவர், கிழக்கிந்திய வணிகக் குழுவினருடன் இந்தியா வந்து சேர்ந்தார். திருநெல்வேலியில் இருந்த ராணுவத்தின் முதல் பாதிரியாராக நியமிக்கப்பட்டார்.

**அர்ப்பணிப்பின் அலங்காரம்**

தன் வாழ்நாளின் ஒவ்வொரு நொடிப் பொழுதையும் சிறந்த முறையில் பயன்படுத்தினார். **“இந்தியாவில் கிறிஸ்தவ சமயத்தின் சரித்திரம்”** என்ற தலைப்பில் ஐந்து புத்தகங்கள் எழுதினார். பள்ளிக்கூடங்களை நிறுவி, வேதப்புத்தகங்களையும், ஜெபப் புத்தகங்களையும் விநியோகம் செய்து மக்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தினார். சென்னைக்கு அடுத்த பூந்தமல்லியில் போர்வீரர்கள் ஆண்டவரை ஆராதிக்க ஒரு ஆலயத்தைக் கட்டினார். ஆங்கில வெளிநாடுகளின் வேதாகம இணைச் சங்கம் ஒன்றையும் நிறுவினார். திருநெல்வேலியில் மட்டுமல்லாமல் சென்னையிலும் பல இடங்களில் கிறிஸ்தவர்களின் ஆன்மீக வாழ்வை மலரச் செய்த இவர், அயராது உழைப்பவராகவும், மக்கள் தொண்டில் கரிசனை உள்ளவராகவும் காணப்பட்டு தன் வாழ்நாளை இன்பமுடன் முடித்தார்.



# கிலெமெந்து

## (அப்போஸ்தலர் காலம்)

அப்போஸ்தலர்களின் காலத்தில், அநேகர் சுவிசேஷப் பணிகளில் பணியாற்ற அவர்களுடன் ஒத்துழைத்தார்கள். இதில் கிலெமெந்து என்பவரும் ஒருவர். பரிசுத்த பேதுரு அல்லது யோவானால் குணமாக்கப்பட்டவர் என்று கருதப்படுகிறது. லூக்கா மற்றும் தீமோத்தேயு என்பவர்களுடன் பல சுவிசேஷ பயணங்களில் பங்குகொண்டு பல துன்பங்களை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டவர்.



பவுல் இவரைக் குறித்து கூறும்போது, **“சுவிசேஷ ஊழியத்தில் பெரும் முயற்சியுடன் உழைத்தவர் என்றும், அவர் நாமம் ஜீவ புஸ்தகத்தில் இருக்கிறது”** என்றார்.

இவர் பவுலுடன் சேர்ந்து ரோமாபுரிக்குச் சென்று அங்கு பேதுரு நடத்தி வந்த வேதாகம கல்லூரியில் பயிற்சி பெற்றார். கிறிஸ்துவின் நற்செய்தி உலகமெங்கும் பரவச் செய்ய, இவர் மிகுந்த ஆவல் கொண்டவராக, அல்லும் பகலும் தனது பணியை அயராமல் செய்தார்.

வேதாகமத்தில் இவரைக் குறித்து, ஒருமுறையே கூறப்பட்டிருந்தாலும், சபைகளின் தலைவராகவும், மக்களின் சிறந்த ஆலோசகராகவும் செயல்பட்டு, கிறிஸ்துவின் நற்செய்தியை மிகுந்த ஆவலுடன் அறிவித்து வந்தார். கொரிந்து சபையில் பிரிவினைகள் காணப்பட்டபோது, பவுல் பிரச்சினைகளை தீர்க்க முயன்றதுபோல, இவரும் அப்பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர மிகுந்த பிரயாசப்பட்டார். அச்சபைக்கு இவர் எழுதிய நிருபத்தில், சபையார் எல்லாவித பகைமையையும், கோபத்தையும் விட்டு விட்டு கிறிஸ்துவின் அடியாராக தாழ்மையை அடைந்து, விண்ணுலகத்தை அடைந்த கிறிஸ்து, மானிடருக்குக் காட்டிய மிகுந்த பொறுமையையும், தாழ்மையையும் நாம் அணிய வேண்டும் என்று எழுதினார்.

மேலும், சபையில் சரீர உயிர்த்தெழுதலைப் பற்றிய சில தவறான கருத்துகள் இருந்து வந்தன. அவற்றை சரிசெய்து அம்மக்களை வேதத்தின் சத்தியத்தில் வழிநடத்தவும் சிறப்புக் கடிதங்களை எழுதினார். டாமிசியன் என்ற ரோமப் பேரரசன், கிறிஸ்தவர்களுக்கு எதிராக செய்த சூழ்ச்சியில், இவரும் அகப்பட்டு இரத்தசாட்சியாக மரித்தார்.

நமது சபையின்
WhatsApp சேனலில் சேர
இந்த QR Codeஐ
Scan செய்யுங்கள்



# இயேசு கிருபையுள்ள வார்த்தைகளைப் பேசுகிறவர்

**“நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியை பின்வைத்துப் போனார்”** (1 பேதுரு 2:21) என்று வேதம் கூறுகிறபடி, நாம் நமக்கு மாதிரியான இயேசுவை முன்வைத்து வாழ்வோம்.

**“எல்லாரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்து, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக்குறித்து ஆச்சரியப்பட்டு: இவன் யோசேப்பின் குமாரன் அல்லவா என்றார்கள்”** (லூக்கா 4:22) என்ற வசனத்தின்படி, இயேசுகிறிஸ்துவினுடைய வாயிலிருந்து கிருபையுள்ள வார்த்தைகளே புறப்பட்டது. அப்படியே நம்முடைய வாயிலிருந்தும் கிருபையுள்ள வார்த்தைகளே புறப்பட வேண்டும். **“விரியன் பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்”** (மத். 12:34) என்ற வசனத்தின்படி, பொல்லாதவர்களிடமிருந்து நலமான வார்த்தைகள் புறப்படாது. காரணம் இருதயத்தின் நிறைவினால்தான் வாய் பேசும்.

**“நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான். பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான் இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்”** (லூக்கா 6:45) என்ற வசனத்தின்படி, நல்ல மனுஷனாயிருந்தால் அவன் வாயிலிருந்து நல்ல வார்த்தைகள் புறப்படும். இருதயத்தின் நிறைவினால் மாத்திரமே அவன் வாய் பேசும். இயேசுகிறிஸ்துவின் வாயிலிருந்து கிருபை பொருந்தின வார்த்தைகளே புறப்பட்டது.

**“இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்திவிருத்தியடையவும், பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்”** (அப். 20:32) என்ற வசனத்தின்படி, கிருபையுள்ள வசனமே மற்றவர்களை பக்திவிருத்தியடையவும் பரிசுத்தமடையவும் செய்யும். அருமையானவர்களே மற்றவர்கள் பக்திவிருத்தியடையவும் பரிசுத்தமடையவும் விரும்பி நாம் கிருபையுள்ள வார்த்தைகளையே பேசுகிறவர்களாயிருக்க வேண்டும். அதோடுமாத்திரமல்ல கிருபையுள்ள வசனமும் தேவனும் நம்மிடத்தில் இருந்தால் மாத்திரமே கிருபையுள்ள வார்த்தைகள் நம்மிடத்தில் இருந்து புறப்படும். **“நம்மிடத்தில்**

**அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்”** (வெளி. 1:6) என்ற வசனத்தின்படி, யார் ஒருவர் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு இரட்சிக்கப்பட்டார்களோ அவர்கள் பிதாவாகிய தேவனுக்கு முன்பாக ராஜாக்களும் ஆசாரியர்களுமாயிருக்கிறார்கள். **“ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்கவேண்டும் வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே. அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன்”** (மல். 2:7) என்ற வசனத்தின்படி, இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட நாம் ஆசாரியர்களாயிருப்பதினால் நம்முடைய வாயிலிருந்து கிருபையுள்ள வசனமே வெளிப்படுகிறதாயிருக்க வேண்டும்.

**“அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக”** (கொலோ. 4:6) என்ற வசனத்தின்படி, நாம் மற்றவர்களிடத்தில் பேசும்போது நம்முடைய வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருக்க வேண்டும். **“உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய் அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்”** (மத். 12:37) என்ற வசனத்தின்படி, நம்முடைய வாயிலிருந்து வெளிப்படுகிற வார்த்தையினாலே நாம் யார் என்று வெளிப்படும்.

**“அத்தருணத்தில் பேதுரு வெளியே வந்து அரமனை முற்றத்தில் உட்கார்ந்திருந்தான். அப்பொழுது, வேலைக்காரி ஒருத்தி அவனிடத்தில் வந்து: நீயும் கலிலேயனாகிய இயேசுவோடே கூட இருந்தாய் என்றாள். அதற்கு அவன்: நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது என்று எல்லாருக்கும் முன்பாக மறுதலித்தான். அவன், வாசல் மண்டபத்திற்குப் போனபொழுது வேறொருத்தி அவனைக் கண்டு: இவனும் நசரேயனாகிய இயேசுவோடே கூட இருந்தான் என்று அங்கே இருந்தவர்களுக்குச் சொன்னாள். அவனோ: அந்த மனுஷனை நான் அறியேன் என்று ஆணையிட்டு, மறுபடியும் மறுதலித்தான். சற்று நேரத்திற்குப்பின்பு அங்கே நின்றவர்கள் பேதுருவினிடத்தில் வந்து: மெய்யாகவே நீயும் அவர்களில் ஒருவன் உன் பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது என்றார்கள்”** (மத். 26:69-73) என்ற வசனங்களின்படி, பேதுருவினுடைய வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகளை வைத்தே அவன் இயேசுவோடு இருந்தவன் என்று கண்டுபிடித்தார்கள்.







அப்படியே அருமையானவர்களே நம்முடைய வாயிலிருந்து புறப்படுகிற பரிசுத்தமான வார்த்தைகளும் வசனங்களும் மாத்திரமே நாம் இயேசுவோடு இருக்கிறவர்கள் என்று அறிந்துகொள்ள செய்யும். **“அவர்கள் உலகத் துக்குரியவர்கள், ஆகையால் உலகத்துக்குரியவைகளைப் பேசுகிறார்கள்”** (1 யோவான் 4:5) என்ற வசனத்தின்படி, உலகத்தில் உள்ள மக்கள் உலகத்துக்குரியவர்களாய் இருக்கிறபடியினாலே உலகத்திற்குரியவைகளையேப் பேசுகிறவர்களாயிருக்கிறார்கள்.

நீங்களும் நானும் ஆவிக்குரியவர்கள் அதோடுமாத் திரமல்ல பிதாவாகிய தேவனுக்கு முன்பாக ஆசாரியர்கள். ஆகவே நம்முடைய வாயிலிருந்து பரிசுத்தமான வார் த்தைகளும் கிருபை பொருந்தின வசனங்களும் மாத்திரமே வெளிப்பட வேண்டும். **“சத்தியவாசகன் நீதியை வெளிப்படுத் துவான். பொய்ச்சாட்சிக்காரனோ வஞ்சகத்தை வெளிப்படுத் துவான்” (நீதி. 12:17) என்ற வசனத்தின்படி, சத்தியத்தை நேசித்து அதை வாசித்து செயல்படுகிற சத்திய வாசகன் என்று சொல்லப்படுகிற தேவனுடைய பிள்ளைகள் நீதியையே அதாவது வசனத்தையே வெளிப்படுத்துகிறவர்களாயிருக்க வேண்டும். “மோசம்போகாதிருங்கள் ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்”** (1 கொரி. 15:3) என்ற வசனத்தின்படி, அடுத்தவர்களின் நல்லொழுக்கங்களைக் கெடுக்கக்கூடிய தேவையில்லாத சம்பாஷணைகளைப் பேசக்கூடாது.

அதோடுமாத்திரமல்ல **“கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்”** (எபே. 4:29) என்ற வசனத்தின்படி, மற்றவர்கள் கெட்டுப்போகத்தக்கதான அல்லவென்றால் அவிசுவாசத்தை உண்டாக்கத்தக்கதான அல்லவென்றால் பரிசுத்தத்தை விட்டு விலகுவதற்கேதுவான எந்த வார்த்தைகளும் கெட்ட வார்த்தைகளே.

அவைகளை அடுத்தவர்களிடம் பேசக்கூடாது. **“ஓ தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத் துக்கொண்டு, சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், ஞானமென் று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங் களுக்கும் விலகு”** (1 தீமோ. 6:20) என்ற வசனத்தின்படி, அருமையானவர்களே சீரைக் கெடுக்கக்கூடிய வீண்பேச் சுகளுக்கு விலகிக்கொள்ள வேண்டும். அப்படியானால் சீர் கேடான வீண் பேச்சு என்பது என்ன?

**“சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு விலகியிரு. அவைகளால் (கள்ளப்போதகர்களான) அவர்கள் அதிக அவபக்தியுள்ளவர்களாவார்கள் அவர்களுடைய வார்த்தை அரிபிளவையைப்போலப் படரும்; இமெநேயும் பிலேத்தும் அப்படிப்பட்டவர்கள் அவர்கள் சத்தியத்தை விட்டு விலகி, உயிர்த்தெழுதல் நடந்தாயிற்றென்று சொல்லி, சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடுகிறார்கள்”** (2 தீமோ. 2:16–18) என்ற வசனங்களின்படி, சீர்கேடான வீண்பேச்சு என்பது வசனத்திற்கு மாறான உபதேசங்களாகிய கள்ளப்போதகமே. அருமையானவர்களே அப்படிப்பட்ட கள்ளப்போதனையான வீண்பேச்சுகளுக்கு உன்னை விலக்கிக் காத்துக்கொள். அப்படியே நீங்களும் சீர்கேடான வீண்பேச்சாகிய கள்ளப்போதகத்தை போதியாமல் கிருபை பொருந்தின வசனங்களையே போதிக்கிறவர்களாயிருக்க வேண்டும்.



**நமது சபையின் சார்பாக கர்த்தருடைய வசனம் சமூக வலைத்தளங்களிலும் பதிவேற்றம் செய்யப்படுகிறது!**



ஏன் சீர்கேடான வீண்பேச்சாகிய கள்ளப் போதகங்களை போதிக்கக் கூடாது? **“மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத் தீர்ப்புநாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்”** (மத். 12:36) என்று இயேசு சொல்லுகிறார். **“பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவனுக்குப் பிரயோஜனமுண் டாகும்படி பேசுங்கள்”** (எபே. 4:29) என்ற வசனத்தின்படி, நாம் மற்றவர்களிடத்தில் பேசும்போது பக்திவிருத்திக் கேதுவான நல்ல வார்த்தைகளையும் கிருபை பொருந்தின வார்த்தைகளையுமே பேசுவோம். இயேசுகிறிஸ்துவின் வாயிலிருந்து கிருபை பொருந்தின வார்த்தைகளே புறப் பட்டதுபோல நம்முடைய வாயிலிருந்தும் கிருபை பொருந்தின வார்த்தைகளே புறப்படட்டும். கர்த்தர்தாமே உங்களை ஆசீர் வதிப்பாராக!! மாரநாதா!

RNI Regn. No: TNTAM/2015/66452
Printed and Published by: Sri. P. Arputharaj Samuel,
On Behalf Of: Zion Trust,
From 27/37, James Street, Poonamallee, Tiruvallur District, Chennai – 600056
Printed at New Shenbagam Offset, 2/67, NGO Colony, Sivakasi West – 626124
Editor : Pastor P. Arputharaj Samuel : Mobile No. 9677050234

# மகன்



ஒரு கிராமத்தில் வயதான ஒருவர் ஒரு கிணற்றுப் பக்கமாக நின்றுகொண்டிருந்தார். மூன்று பெண்கள் தண்ணீர் எடுத்துக்கொண்டு பேசிக்கொண்டிருந்தனர். முதலாமவள் தன் மகனைப் புகழ்ந்து, அவனைப்போல் யாருமில்லை என்றாள். இரண்டாமவள் தன் மகனின் பாடல் இயற்றும் திறமையைப் போற்றினாள். இருவரும் மூன்றாமவள் பக்கமாய்த் திரும்பி அவளது மகனைக் குறித்து வினவினர். அவள், *“என் மகன் சாதா பையன்தான்”* என்றாள். மூவரும் பானைகளை இடுப்பில் சுமந்துகொண்டு வீடு திரும்ப, முதியவரும் பின்தொடர்ந்தார். மகன்கள் தாய்மாரிடம் ஓடி வந்தனர். முதல் பெண்ணின் மகன், அன்று அவன் சாதித்ததை எடுத்துரைத்தான். இரண்டாமவன் தான் இயற்றியப் புதிய பாடலைப் பாடிக் காட்டினான். மூன்றாமவன் தன் தாயின் பானையை வாங்கிக்கொண்டு வீடு நோக்கிச் சென்றான். மூன்று பெண்களும் முதியவரிடம், *“எங்கள் மகன்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?”* என்று கேட்டனர்.

“உங்கள் மகன்களா? நான் ஒரு மகனைத்தானே கண்டேன்” என்றார் பெரியவர்.

**மகன் அல்லது மகள் என்று அழைக்கப்பட உனக்குத் தகுதி உண்டா?**

# ஆசிரியரின் விடுகதை



ஆசிரியர் ஒருவர் பிள்ளைகளுக்கு விடுகதை ஒன்றைக் கூறினார். *“உலகிலுள்ள எல்லா மக்களும், ஒவ்வொரு நாளும், ஒரே அளவைப் பெறுவர். அவர்கள் அன்றே அதைச் செலவழிக்க வேண்டும். அதைப் பயன்படுத்தாவிடில் இழந்துபோவர். அதை அடுத்த நாளுக்கு வைத்துக்கொள்ள முடியாது. அது என்ன?”* எல்லாப் பிள்ளைகளும் விடையைக் கண்டுபிடிக்க மண்டையை உடைத்துக் கொண்டனர். கடைசியில் ஒரு பிள்ளை கையை உயர்த்திக் கூறினாள்: *“சார், எனக்குத் தெரியும். ஒவ்வொருவருக்கும் ஒரு நாளில் 24 மணி நேரம் கொடுக்கப்படுகின்றன. அதைப் பிரயோஜனமாய்ப் பயன்படுத்துவோமானால் வாழ்க்கையில் முன்னேறலாம். தங்கள் நேரத்தை வீணடிப்பவர்கள் வாழ்க்கையில் முன்னேற மாட்டார்கள்”.* “சபாஷ்,” என்றார் ஆசிரியர்.

**காலம் பொன்போன்றது. அதை வீணடிக்காதீர்கள்.**


Follow Us for more

zionchurchpoonamallee@gmail.com

https://zionchurchpoonamallee.com

9677050234 / 9884253758

@ZionChurchPoonamallee

Zion-Church-Poonamallee

zion.church.poonamallee




# ஒரு ரூபாய் தானே!


பிரசங்கி ஒருவர் புதிய ஊருக்கு இடம்பெயர்ந்தார். சில வாரங்களுக்குப் பிறகு பஸ் ஏறி பக்கத்து கிராமத்திற்குச் சென்றார். டிக்கட் வாங்கிய பின் கண்டக்டர் தெரியாமல் தனக்கு ஒரு ரூபாய் கூடுதலாக மிச்சம் கொடுத்ததைக் கண்டார். என்ன செய்யலாம் என்று யோசித்தபோது, ”ஒரு *ரூபாயைத் திருப்பிக் கொடுத்துவிடு, வைத்துக்கொள்வது தவறல்லவா”* என்றது மனம். *“ஒரு ரூபாய்தானே போவது. இந்தச் சிறிய தொகையைக் குறித்துக் கவலைப்படப்போவது யார்? பஸ் செலவும் கூடிக் கொண்டேப் போகிறது. யாருக்கும் தெரியப்போவதும் இல்லை. கடவுள் கொடுத்தப் பரிசாக நினைத்து வாயை மூடிக்கொண்டு இரு”* என்றது இன்னொரு மனம். இறங்கவேண்டிய இடம் வந்தபோது, படியில் நின்று ஒரு ரூபாயைக் கண்டக்டரிடம் நீட்டி, “ஒரு ரூபாய் கூடக் கொடுத்துவிட்டீர்கள்” என்றார். கண்டக்டர் புன்முறுவலுடன் சொன்னார், *“நீங்கள்தானே புதிய ஆயர்? எங்கே ஆராதனைக்குப் போகலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தேன். ஒரு ரூபாய் கூடக் கொடுத்தால் என்ன செய்வீர்கள் என்றுப் பார்க்க நினைத்தேன்”* என்றார். ஆயர் பஸ்ஸைவிட்டு இறங்கினபோது அவருக்கு மயக்கமே வந்துவிட்டது. கம்பம் ஒன்றைப் பிடித்துக்கொண்டு, *“ஆண்டவரே, உம்மை ஒரு ரூபாய்க்கு விற்றுப்போட இருந்தேனே”* என்றார்.

**சிலர் வாசிக்கக்கூடிய வேதாகமம் நமது வாழ்க்கை மட்டுமே.**

News Paper of India under Regn. No. TNTAM/2015/66452

கடன் வாங்குவது பாவமா?

அவசரத்துக்கு வாங்கிக்கலாமா?



ஏற்கனவே கடனிருந்தால் என்ன செய்ய வேண்டும்?

ஆண்டவருடைய அறிவுரை என்ன?

**போன்ற கேள்விகளுக்கு வேதத்திலிருந்து பதில் காண்போம்**

# கடன்

## எனும் பேராபத்து!!




### கடன் வாங்குவது பாவமே!

ரோமர் 13:8 – **ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்** என்ற வசனத்தின்படி, வேதம் கடனுக்கு எதிராக இருக்கிறது. அதோடுமாத்திரமல்ல, வேதம் – **கடன் வாங்கினவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை** (நீதி. 22:7) என்றும் சொல்லுகிறது. நீங்கள் கடன் வாங்கியிருந்தாலோ, கடன் வாங்கின மற்றவர்களை நீங்கள் அருகாமையில் பார்த்திருந்தாலோ, இந்த வசனம் எவ்வளவு உண்மை என்று உங்களுக்குப் புரியும். மேலும், புதிய ஏற்பாட்டின்படி, நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள் மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள். (1 கொரி. 7:23) என்ற வசனத்தின்படி, நாம் நம்மை அடிமைகளாக்கக்கூடாது.

### அவசரத்திற்கோ, ஆபத்திற்கோ.. எப்படி வாங்கினாலும் பாவமே!

சிலர் இப்படி எண்ணுகிறார்கள் — ஆபத்திற்கு அல்லவென்றால் அவசரத்திற்கு கடன் வாங்கினால் அது தப்பில்லை என்கிறார்கள். அது மனசாட்சி. வேதத்திற்கும் மனசாட்சிக்கும் ஒத்து வராது. உதாரணமாக, இயேசு, தாம் எருசலேமுக்குப் போய், பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்ல ஆரம்பித்தார். உடனே பேதுரு: **“ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை”** என்று அவரிடம் சொன்னான். அதற்கு இயேசு: **“எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய் தேவனுக்கேற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்”** என்று சொன்னார். இயேசுகிறிஸ்து தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றப் போகிறதைக்குறித்து பேசும்போது, பேதுரு ஆண்டவருக்கு நன்மை செய்வதுபோல் அவனது மனசாட்சியின்படி சொல்லுகிறான். நம்முடைய மனச்சாட்சி வேறு, தேவனுடைய நீதி வேறு.

### ஏற்கனவே இருந்தால் என்ன செய்ய வேண்டும்?

ஏற்கனவே கடன் இருப்பின், செய்த தவறை உணர்ந்து, சீக்கிரம் கடனை அடைத்து, அடிமைத்தனத்திலிருந்து விடுபட, ஆண்டவரிடம் கிருபையையும் இரக்கத்தையும் கேட்க வேண்டும். மேலும், வசனத்துக்குக் கீழ்ப்படிந்து, மறுபடி கடன் வாங்காமலிருக்க வேண்டும். *இன்று சில விசுவாசிகளுக்கும்கூட, வாங்கின கடனை திரும்ப செலுத்த மனதில்லாமலிருக்கிறார்கள். இது ஆண்டவருக்கு பிரியமாயிராது.* **துன்மார்க்கன் கடன்வாங்கிச் செலுத்தாமற்போகிறான், நீதிமானோ இரங்கிக்கொடுக்கிறான்.** (சங் 37:21) என்று வேதம் சொல்லுகிறது.

### ஆண்டவருடைய அறிவுரை

**உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி உன்னை ஆசீர்வதிப்பதினால், நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்குவதில்லை** (உபா. 15:6).

Registered with the Registrar of
Postal Registration No. TN/TBM/193/2024-2026
TN/PMG(CCR)/WPP 647/2024-2026
Published on 11th - 15th of December 2025
Licensed to post without prepayment

To

IF UNDELIVERED
PLEASE RETURN TO

P. Arputharaj Samuel,
Pastor - Zion Church
27/37, James Street,
Poonamallee
Chennai - 600056
9677050234

சீயோன் சபை வழங்கும்
பரிசுத்தத்தின் நேரம் நிகழ்ச்சி
நம்பிக்கை TV TELEVISION — சனி மாலை 6:00 மணிக்கு
Salvation Tv — ஞாயிறு மதியம் 2:30 மணிக்கு
ஹெவன் HEAVEN TV INDIA — ஞாயிறு இரவு 9:30 மணிக்கு




குறிப்பு: தூய வேதாகமம் மாற்கு 16:15,16 ன் அடிப்படையிலும், இந்திய அரசு சட்டம் ஷரத் 25ன் கீழ் அளிக்கப்பட்டுள்ள மத சுதந்திரத்தின் அடிப்படையிலும் இப்பத்திரிகை பிரசுரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. யாரையும் கட்டாயப்படுத்தியோ, பயமுறுத்தியோ, நயங்காட்டியோ, மோசடியான முறையில் மதம் மாற்றுவது இப்பத்திரிக்கையின் நோக்கமல்ல.